# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 09 வெள்ளிக்கிழமை (26-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:334


# யாழ். மாவட்டத்தில் 9கட்சிகள் களத்தில்?

## இறுதி நிலைவரம் நாளையே தெரியும்

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்26

**பொதுத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தமது வேட்பாளர் பட்டியல்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நாளை நண்பகலுடன் முடிய இருக்கையில் -**

**யாழ்.மாவட்டத்தில் ஒன்பது கட்சிகள் களத்தில் இறங்குவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன.**

நேற்றுவரை ஜே.வி.பி. மட்டுமே யாழ்.மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தது.

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, சிஹல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), புதிய ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய எட்டு அணிகளே இன்று அல்லது நாளை இங்கு வேட்புமனுத் தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றுள் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கான ஸ்தானத்தை கொண்டிராததால் அது சுயேச்சைக்குழுவாகப் போட்டியிடும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தனது வேட்பாளர் பட்டியலை நாளை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதை ஒட்டி ஊர்வலம் ஒன்று நடைபெறக் கூடும் எனப் பேச்சடிபட்டது. எனினும் வேட்புமனு இன்றா நாளையா தாக்கல் செய்யப்படும் என்பது தெரியவரவில்லை. (உ)

## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு மட்டக்களப்பில் இன்று வேட்புமனு

நடைபெறவுள்ள தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கான தனது வேட்புமனுவை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு இன்று காலை தாக்கல் செய்யுமென்று அந்த வேட்பாளர் பட்டியலின் முதன்மை வேட்பாளரான ஜோசப் பராஜசிங்கம் தெரிவித்தார். -

அப்பட்டியலில் போட்டியிடும் மற்றைய வேட்பாளர்களின் விவரம் வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் பொன்னம்பலம் செல்வராஜா, அழகு சுப்பிரமணியம் சத்தியநாதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர்), அருணாசலம் செல்வேந்திரன் (அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர்), எஸ்.குமரேஸ்வரன் ஆகியோரும் -

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஞானமுத்து கிருஷ்ண பிள்ளையும் -

ரெலோ சார்பில் உபதலைவர் இந்திரகுமார் பிரசன்னா, ஓய்வுபெற்ற மண்ணியல் ஆய்வாளரான தங்கராஜா தங்கவடிவேல் ஆகியோரும் - போட்டியிடுகின்றனர். (உ-ஒ-9)

## திருகோணமலையில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்கள்

திருகோணமலை,ஒக்.26

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் உதயசூரியன் சின்னத்தில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் ஓரளவு பூர்த்தியாகியுள்ளது.

தலைமைவேட்பாளராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் போட்டியிடுகின்றார். இவரோடு முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.துரை ரெட்ணசிங்கம், ச.அன்புமுகுந்தன், திருமதி கமலா தில்லைநாதன், இ.இராமநாதன் ஆகியோரும்; தமிழ்க் காங்கிரஸ் சார்பில் டாக்டர் முரளி மனோகரனும் போட்டியிடுவதற்கு சம்மதம் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' இன்று புறப்படுமாம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

வழமையாக வியாழக்கிழமைகளில் இடம்பெறும் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை காலநிலை சீரின்மை காரணமாக நேற்று இடம்பெறவில்லை என்று 'றான்' அலுவலகம் தெரிவித்துள்ளது.

கப்பல் தாமதமாக நேற்றைய தினமே திருமலையில் இருந்து வடக்கே புறப்பட்டதாகவும் -

அக்கப்பல் இன்று இங்கிருந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் என்றும் 'றான்' அதிகாரி ஒருவர் நேற்று மாலை தெரிவித்தார்.

பயணிகளை இன்று காலை 9.00 மணிக்கு முன்னர் 'றான்' அலுவலகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வித்தை சிறக்கும் விஜயதசமி தினம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.26

வித்தைகள் கற்கத் தொடங்கவும், தொழில்கள் சிறக்க வழிபாடு நடத்தவும் உகந்த தினமான விஜயதசமி இன்று இந்துக்களால் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

விஜயதசமி தினத்தை முன்னிட்டு, இந்து ஆலயங்களில் விசேட வழிபாடுகளும், வாழைவெட்டு எனப்படும் 'மானம் பூ' உற்சவமும் இடம்பெறுகின்றன.

கல்விச்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் விசேட ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. சிறார்களுக்கு ஏடுதொடக்கலும் இடம்பெறுகின்றன. (க-180-86-17-7-4)

## யாழ். உட்பட 3 மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நிற்கும்

### 9 மாவட்டங்களில் ஐ.தே.க. பட்டியலில்!

கொழும்பு,ஒக்.26

எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து அக்கட்சியின் சின்னத்தில் ஒன்பது மாவட்டங்களிலும -

தமது சின்னத்தில் தனித்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திகாமடுல்ல மாவட்டங்களிலும் - போட்டியிடுவது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பீடம் முடிவு செய்துள்ளது.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கூடிய அரசியல் பீடம் தேர்தல் தொடர்பாக ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளது.

வன்னி, திருமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, குருநாகல், கம்பஹா, பதுளை, காலி ஆகிய மாவட்டங்களிலேயே ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது என்றும் -

முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பில் புளொட் இடம்பெறாமைக்கு அக்கட்சியே காரணம் என்கிறார் சங்கரி

யாழ்ப்பாணம்,ஒக்.26

தமிழர் கூட்டமைப்பில் புளொட் இடம்பெறாமைக்கு அக்கட்சியின் நடவடிக்கைகளே காரணம் என்று கூறியிருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

"கூட்டமைப்பில் தாங்கள் இடம் பெறாமைக்கு 4 தமிழ்க் கட்சிகள் மீது புளொட் குற்றச்சாட்டு" என்ற தலைப்பில் புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறிய கருத்துக்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன.

அதற்குப் பதில் அளிக்கும் வகையில் வீ.ஆனந்தசங்கரி நேற்று அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்தார். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்ப

(2ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்தில்

## முதல் வேட்புமனு நேற்று ஜே.வி.பி. சமர்ப்பித்தது!

யாழ்ப்பாணம்,ஒக்.26

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் முதல் பட்டியல் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஜே.வி.பியே நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலை யாழ்.செயலகத்தில் தாக்கல் செய்தது.

பொலீஸ் பாது[illegible]ன் செயலகத்துக்கு வந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவர் தமது கட்சி வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

ஜே.வி.பியின் வேட்பாளர்கள் பெயர் விவரங்கள் வருமாறு:-

ஜெயமுத்து நடராஜா, (முதன்மை வேட்பாளர்), செல்லையா நடராஜா, சுந்தரம் கணேசமூர்த்தி, பசீர் கிருஷ்ணமூர்த்தி, மலையன் இராசையா, கோபாலன் அருளப்பன், நாராயணசாமி ராஜகோபால், பெருமாள் சத்தியசீலன், கறுப்பையா தவச்செல்வம், ஆறுமுகம விஸ்வநாதன், பிச்சை லோகநாதன், வேலாயுதம் விஜயகுமார் ஆகியோரே ஜே.வி.பி. சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் ஜே.வி.பி.தாக்கல் செய்துள்ள வேட்புமனுவில் இடம்பெற்றுள்ள பெயர்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர்களாக உள்ள போதும், வேட்புமனு சிங்கள மொழியிலேயே முற்றுமுழுதாக நிரப்பப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை -

வன்னி தேர்தல் தொகுதிக்கான தனது வேட்புமனுவையும் ஜே.வி.பி.

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஊர்க்காவலர் உட்பட

## ஒரே குடும்பத்தவர் நான்கு பேர் அம்பாறையில் சுட்டுக்கொலை!

அம்பாறை,ஒக்.26

அம்பாறை மத்தியமுகாம் பகுதியில் ஊர்காவற்படையைச் சேர்நத ஒருவரும் அவரது குடும்பத்தவர்களும் உட்பட 4 பேர் நேற்றுமுன்தினமிரவு 8.50 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஊர்காவலர், அவரது மனைவி, தந்தை மற்றும் உறவினரான பெண்மணி ஒருவர் ஆகியோர் அவர்களது வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் வீட்டில் இருந்த மற்றொருவர் படுகாயமடைந்தார். அவர் அம்பாறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் கொலைச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று, விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட கள நிலைவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-9)

## தப்பியோடிய இராணுவத்தினர் நாட்டை விட்டு ஓடவும் முயற்சி!

### ஆட்சி மாற்றத்துக்கு அஞ்சி

கொழும்பு,ஒக்.26

முப்படைகள் மற்றும் பொலீஸில் இருந்து தப்பியோடிய பலர் போலிக் கடவுச்சீட்டுக்களைப் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்று வருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ள பலர் தவறான தகவல்களைத் தந்து கடவுச்சீட்டுக்களைப் பெற முயற்சிப்பதாகவும் -

நேற்று மட்டும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட பலநூறு பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் -

இத்தகையோர் பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவத்தில் 'தொழில்' என்ற வினாவுக்கு 'இல்லை' என்று மொட்டையாகப் பதிலளிப்பதாகவும் -

தப்பியோடிய படையினர் அல்லது பொலீஸார் என்பதை வெளிப்படுத்தாமலேயே பாஸ்போர்ட்டைப் பெற்றுக்கொள்ள இவர்கள் முயல்வதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

படைகளை விட்டுத் தப்பியோடிய பின்னர், இதுவரை காலமும் பொ.ஐ.முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய பிரமுகர்களின் ஒத்துழைப்புடன் பொலீஸாரிடம் சிக்காமல் பல சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்த இவர்கள், நடைபெறவுள்ள தேர்தலின் மூலம் ஆட்சி மாற்றம் வந்தால், அதன் பின்னர் சிக்க நேரிடலாம் என்ற அச்சத்தில் நாட்டை விட்டுத் தப்பியோட முயல்வதாகக் கூறப்படுகின்றது. (உ-164)

கொழும்பு :கிராண்ட்பாஸிலும்

## குப்பைத் தொட்டியில் இருந்து தற்கொலை அங்கி மீட்பு!

கொழும்பு,ஒக்.26

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் உள்ள குப்பைத் தொட்டி ஒன்றில் இருந்து தற்கொலைக் குண்டுதாரி அணியும் அங்கி ஒன்றைப் பொலீஸார் கண்டெடுத்துள்ளனர்.

சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வழங்கிய தகவலின் பேரில் கடந்த புதனன்று இந்த அங்கி கண்டெடுக்கப்பட்டது.

படை அதிகாரிகளை இலக்கு வைத்துத் தாக்கும் நோக்கிலேயே இந்த அங்கி எடுத்துவரப்பட்டிருக்கலாம் என்று இராணுவத்தினர் கருதுகின்றனர்.

கடந்த வாரம் சுகததாஸ விளையாட்டரங்கில் இராணுவத்தினரின் வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும், பின்னர் அது பிற்போடப்பட்டதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

முயற்சி கைகூடாத நிலையில் குப்பைத் தொட்டிக்குள் இந்த தற்கொலை அங்கியை மறைத்து வைத்து விட்டுச் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் படையினர் கருதுகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் விகாரமாதேவி பூங்காவுக்கு அருகிலும் இதேபோன்று தற்கொலை அங்கி மீட்கப்பட்டது தெரிந்ததே. (க-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வரதராஜப்பெருமாள் பேட்டி

# அபிவிருத்தி என்ற பெயரில் மக்களுக்கு பிச்சை போடுவதை நிராகரிக்கிறோம்!

## போராட்டம் என்ற பெயரில் மக்களை அழிப்பதையும் எதிர்க்கிறோம்

கொழும்பு,ஒக்.26

அரசுக்கு வால்பிடித்து, அரசு செய்வது எல்லாம் சரி என்று தலையாட்டிக்கொண்டு அரசு கொடுக்கும் பணத்தைத் தமிழ் மக்களுக்குப் பிச்சை போடும் அரசியல் போக்கை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

- இப்படிக் கூறுகின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) பிரமுகரும், வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அ.வரதராஜப்பெருமாள்.

கொழும்பில் அரச பாதுகாப்புடன் அரசுப் பிரமுகர்கள் தங்கியுள்ள 'சபீட்' தொடர்மாடியில் வசிக்கும் அவர், அங்கு வைத்து நேற்று உதயனுக்கு வழங்கிய பேட்டியில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'போராட்டம்', 'போராட்டம்' என்று கூறிக்கொண்டு மக்கள் அழிந்துகொண்டிருக்கும் போக்கையும் அபிவிருத்தி என்று மக்களுக்குப் பிச்சை போடும் போக்கையும் நாம் நிராகரிக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு நிரந்தரத்தீர்வு ஒன்று கிடைக்கவேண்டுமாயின் பொது மக்கள் ஐக்கிய முன்னணியையோ, ஐ.தே.கட்சியையோ நாம் ஆதரிக்கத்



தயங்கமாட்டோம். கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு திட்டத்தை முன்வைத்தோம். ஐதேகட்சி ஆட்சிக்கு வந்தால் அதனிடமும் தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பிப்போம்.

தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதால் அந்தக் கட்சிகளுக்கு நாம் ஆதரவு வழங்குவதாகக் கருதமுடியாது. தமிழ்மக்கள் நிரந்தரச் சமாதானத்துடன் வாழக்கூடிய நிலையை உருவாக்க விரும்புகின்றோம்.

தேர்தலுக்காக கூட்டணி அமைத்துள்ள கட்சிகள், தமிழ் மக்கள் நிரந்தர சமாதானத்துடன் வாழக்கூடிய திட்டம் ஒன்றை முன்வைப்பார்களா? அல்லது எவரது ஆசியுடன் தேர்தலில் குதித்தார்களோ, அவர்களைக் கொண்டு தீர்வுத்திட்டம் ஒன்றை முனவைப்பார்களா?

வன்னி சென்று புலிகளுடன் கலந்துரையாடித் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க இந்தக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவராவது முன்வருவார்களா?

ஒற்றையாட்சியின் கீழ் சமஷ்டி அமைப்பிலான தீர்வு ஒன்றை எட்ட இந்தக் கூட்டமைப்பு முன்வருமா?

சகல தமிழ் கட்சிகளும் இணைந்து புலிகளுடன் கலந்துரையாடி தமிழ் மக்களுக்கான சமாதானத் திட்டத்தை வகுக்க இந்தக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்யுமா?

விடுதலைப் புலிகளுடன் மட்டும் தான் பேசவேண்டும் என்று குரல் எழுப்பும் இந்தக் கூட்டமைப்பினர், நாடாளுமன்றத்துக்குச் சென்ற பின்னர் அங்கு கிடைக்கும் சம்பளம், சலுகைகள், வாகனங்களை புலிகளுக்கு வழங்குவார்களா?

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அல்லது போராளிகள் நடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முன்வந்தால் நாம் தேர்தலில் இருந்து ஒதுங்கிவிடுவோம். ஆனால் இந்த கூட்டமைப்பில் இருப்பவர்கள் நிச்சயம் தேர்தலில் போட்டியிடுவார்கள்.

நடுத்தெருவில் நின்று கப்பம் கேட்டவர்களும், கட்டாய ஆள் சேர்ப்பில் ஈடுபட்டவர்களும்தான் இன்று புலிகளின் ஆதரவுடன் தேர்தலில் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க வருகின்றனர்.

கடந்த காலங்களில் அமைச்சர்களாக இருந்த நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் தொழிற்சாலைகளை நிறுவி, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவினர். ஆனால் இன்று அமைச்சராக இருப்பவர் தமிழ மக்களுக்கு பிச்சைக்காசு போடுகிறார்.

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சராக நான் இருந்த சமயம் இப்படிப் பிச்சை போட்டிருக்கலாம். ஆனால் நான் அப்படிச செய்யவில்லை.

வடக்கு - கிழக்கு என ஒரு நிர்வாக இயந்திரத்தை உருவாக்கினேன். பெரும்பாலான விடயங்களை நாமே முடிவு செய்யும் நிலையை உருவாக்கினேன். பிரேமதாஸாவின் சூழ்ச்சியால் நான் பதவியில் இருந்து இறக்கப்படாவிட்டால் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ் மாநிலம் ஒன்றை உருவாக்க உரிய அத்திவாரம் இட்டிருப்பேன் - என்றார் அவர்.(உ-ஒ-3)

## விமானப் பயணச்சீட்டுப் பெற லஞ்சம் வாங்கியவர் கைது!

விமானப் பயணச்சீட்டுப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து பொதுமக்களிடம் லஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.சிவில் அலுவலக இராணுவத்தினர் கொடுத்த தகவலின் அடிப்படையில் கொட்டடியைச் சேர்ந்த சேதுநாதன் சுதர்சன் (அல்லது கண்ணாடி) என்ற நபரையே யாழ்பொலீஸார் நேற்று முன்தினம் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

விமானம் மூலம் கொழும்பு செல்ல காத்து நிற்கும் பயணிகளிடம் விமானப் பயணச்சீட்டுப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து அதற்கு இராணுவத்தினருக்கு மேலதிகமாதப் பணம் கொடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டு பெருமளவு பணத்தைப் பொது மக்களிடம் பெற்று வந்தார் என்று கூறப்படுகின்றது.

யாழ்.பொலீஸாரால் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

பயணச் சீட்டுப் பெறுவதற்காக இவருக்கு அதிகளவில் பணம் கொடுத்த பொதுமக்களிடம் அது பற்றிய விவரத்தைப் பெற்றுச் சமர்ப்பிக்கும்படி யாழ்.பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இவரிடம் பணத்தை இழந்த பொது மக்கள் அது பற்றிய விவரத்தைத் தங்களுக்குத் தந்து விசாரணைக்கு உதவுமாறு யாழ்.பொலீஸார் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (உ)

## இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் மகரகமவில்!

யாழ்ப்பாணம்,ஒக்.26

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் அடுத்தமாதம் 25,26 ஆம் திகதிகளில் மகரகமவில் நடைபெறவுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்திய மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்ற வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக விரைவில் கொழும்பு செல்லவுள்ளனர்.

எனவே தேசிய மட்டப் போட்டியில பங்கு பற்றுவதற்குத் தகுதியுடைய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-4)

## சமூகச் சீர்கேடுகள் ஒழிப்பு வாரம் அடுத்தமாதம் யாழ். மாவட்டத்தில்!

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்மாநகரசபையின் அனுசரணையுடன் மாநகரசபை சுகாதாரக் குழுவின் ஏற்பாட்டில் சமூகச்சீர்கேடுகள் ஒழிப்பு வாரம் எதிர்வரும் நவம்பர் 1 ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இவ்வாரத்தையொட்டி யாழ்மாநகரசபை சுகாதாரக் குழுவினர் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், சனசமூகநிலையங்கள், பல்கலைக்கழக சமூகம், சமூகசேவைத் திணைக்களம், சுகாதாரத்திணைக்களம ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ள இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை யாழ்மாநகர சபை சுகாதாரக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பெரும் விருட்சமாக வியாபித்துள்ள சமூகச் சீர்கேடுகளை நாடகங்கள், கலைநிகழ்வுகள் மூலம் வெளிக்கொணர்ந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என சுகாதாரக் குழுத் தலைவர் மனுவல் மங்களநேசன் தெரிவித்தார்.

ஒரு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ள இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி உறுப்பினர் மோசஸ் எட்வேட், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் எஸ்.விஜயரட்ணம், ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் மனுவல் மங்களநேசன், புளொட் உறுப்பினர் எஸ்.ஜெயச்சந்திரன் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் யாழ்.மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று சமூகச் சீர்கேடுகள் பற்றிய விளக்கங்களையும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்துவர். (க-10-ரி)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தேர்தல் மோசடிக்குத் திட்டம்

## கொடிதுவக்கு குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.26

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அளிக்கப்பட உள்ள தபால் மூல வாக்குகளில் பொ.ஐ.முவுக்கு சாதகமாக மோசடிகள் செய்வதற்கு ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் சதித்திட்டம் தீட்டியுள்ளனர்.

ஐ.தே.கவின் பேச்சாளர் கருணாசேன கொடிதுவக்கு, கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

திணைக்களங்களில் சேகரிக்கப்படும் தபால் மூல வாக்குகள், மத்திய தபால் நிலையத்துக்கு எடுத்து வரப்படும் சமயத்தில் வாக்குச்சீட்டுகளை மாற்றுதல் உட்பட மோசடிகளில் ஈடுபட ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு திட்டங்களை வகுத்துள்ளதாகவும் -

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் - கருணாசேன கொடிதுவக்கு மேலும் கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகி ஐ.தே.கட்சியில் இணைந்துள்ள பதுளை நகர சபைத் தலைவர் சமரவீர வீரவன்னி, காலி நகர சபைத் தலைவர் லயனல பிரேமரத்ன ஆகியோரும் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர். (ஒ-3)

## கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2002ஆம் ஆண்டில் தரம் 4 வகுப்பில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் மூன்றாம் திகதிவரை ஆறு தினங்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

## 'செடேக்' நிறுவனம் நடத்தும் சமாதானக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.26

சமாதானத்தை வலியுறுத்தி இலங்கைத் திருச்சபையின் சமூக சேவை நிறுவனத்தால் (செடேக்) நடத்தப்படும் சமாதான விழிப்புணர்வுக் கருத்தரங்கை குடாநாட்டில் நடத்துவதற்கு அருட்தந்தை அலெக்சாண்டரும் அருட்சகோதரி பற்றிமா நாயகியும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கியூடெக் நிறுவனத்தின் ஆதரவுடன் இன்று தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி வரை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவர்கள் சமாதான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நிகழ்த்துவர்.

இன்று மாலை 4 மணிக்கு குருநகரில் இளைஞர்களுக்கும் நாளை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களுக்கும் பிற்பகல் 3 மணிக்கு மெலிஞ்சிமுனையிலும, நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண மறைக்கல்வி நிலையத்திலும் பிற்பகல் 3மணிகு பருத்தித்துறையிலும், எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும், இவர்களின் சமாதான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெறும் என்று கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் தெரிவித்தார். (ஒ-6)

## சிசுக் கொலைக் குற்றச்சாட்டில் இளம் யுவதிக்கு விளக்கமறியல்

நெல்லியடி,ஒக்.26

நிறைமாத சிசு ஒன்றை பிரசவித்து நிலத்தில் புதைத்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட யுவதி ஒருவரை ஒரு வார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அபிரேம சங்கர் உத்தரவிட்டார்.

புலோலி தெற்கு சின்னத்தாய் பிளளையார் கோவிலடிப் பகுதியில், இச்சிசுவின் சடலம் கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை பொலீஸாரினால் மீட்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக புலோலி தெற்கு விழிப்புக் குழுவினர், மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக, இப்பகுதியில் வசித்து வந்த, மருதங்கேணியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்த யுவதியை பருத்தித்துறை பொலீஸார் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம், இம்மாதம் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.(க-109-117)

## கூட்டமைப்பில் புளொட் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

நான்கு கட்சிகள் இணைந்து ஏற்படுத்தியுள்ள தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் நம்மைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்ற சித்தார்த்தனின் குற்றச்சாட்டுக்கு உரிய பதில் அவர்களிடமே உண்டு.

இக்கூட்டமைப்பு அரசுக்கெதிரானதும், அரசிடம் உதவி, ஒத்தாசை பெறாது இன்று இயங்கும் அமைப்புக்களை மட்டும் சேர்த்துக்கொண்டதுமான ஓர் அமைப்பாகும்.

கடந்த காலத்தில் எந்தெந்த அமைப்பு, எப்படி, எப்படி இயங்கியது என்பதைப் பற்றி இன்று விவாதிக்கத் தேவையில்லை. கடந்ததை மறக்கும்படியன்றி, நிகழ்வதை மறக்கும்படி யாரும் கோரவில்லை; இரகசியமாகவும் நாம் செயற்படவில்லை. பல்வேறு ஸ்தாபனங்கள், ஊடகவியலாளர்கள், அமைப்புக்கள், பிறநாட்டு - உள்நாட்டு பிரமுகர்கள், பத்திரிகைகள் அனைத்து தரப்பினது வேண்டுகோளுக்கு அமையவே நாம் ஒற்றுமையாக செயற்பட முன்வந்துள்ளோம். அவர் அதைச் செய்யவில்லையா, இவர் இதைச் செய்யவில்லையா என விவாதிப்பதை விடுத்து, நான் எதைச் செய்கிறேன், செய்வது சரிதானா எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது சித்தார்த்தனின் கடமையாகும்.

இன்றும் அவர்கள் ஈடுபட்டுள்ள செயற்பாடுகளை நாம் மறக்க வேண்டுமா? அவற்றை நாமும் ஏற்க முடியாது; மக்களையும் ஏற்குமாறு வற்புறுத்தமுடியாது.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குகின்ற கூட்டு என சித்தார்த்தன் கூறுவது அவரின் விஷமத்தனமான கூற்றாகும். அவர், தான் எங்கிருக்கிறார் என்பதை வெளிப்படுத்தியது பாராட்டுக்குரியது. அவருக்கு ஒன்றை வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். ஐ.தே.கட்சிக்கோ பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கோ நாம் முண்டு கொடுக்கப் போவதில்லை. அதற்குப் பழக்கப்பட்டவர்கள் யார் என்றும் எமக்குத் தெரியும்.

இக்கூட்டு தேர்தலுக்காகக் கூட்டப்பட்ட கூட்டு அல்ல. தேர்தலுடன் முடிவுறும் கூட்டுமல்ல. அடுத்த கட்டமாக நாம் மீண்டும் கூடும்போது - அதாவது தேர்தலின் பின் - அவர்களும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய எமது கூட்டில் சேர்ந்து கொள்ளலாம். எமது பயணம் நீண்ட பயணம் ஆகும். ஆகவே புளொட் உடனடியாக அரசுடன் உள்ள சகல உறவுகளையும் துண்டித்து, அரசிடம் தமது இயக்க உறுப்பினர்களுக்கு மாதாமாதம் பெறும் உதவிப் பணத்தை வாங்காது நிறுத்திவிட்டு, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களில் பலாத்காரமாகப் பிடித்து வைத்துள்ள பல வீடுகளில் முதற்கட்டமாக மேலதிகமானவற்றை விடுவித்து, ஏனையவற்றுக்கு வாடகை வழங்கச் சம்மதித்து, அரச படைகளுடன் சேர்ந்து போகும் கட்சித் தொண்டர்களை நிறுத்தியும் அப்பாவி இளைஞர்களை இராணுவத்துக்கு காட்டிக் கொடுப்பதையும் நிறுத்தியும் விட்டால அடுத்த கட்ட நடவடிக்கைகளில் அவர்களையும் சேர்த்துக் கொள்வதில் எமக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை. நம் கொள்கைத் திட்டத்தை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டதாக கூறிக்கொண்டு, அதை அடையமுடியாத வகையில் - அதற்கு முரணாக - செயற்படுவதே எமக்கு வேதனை தருகின்றது. இதையே பல சமயப் பெரியார்களும் கல்விமான்களும் கூறுகிறார்கள். இன்றைய நிலையில் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி), புளொட் ஆகிய மூன்று இயக்கங்களுக்குள் அதிக வேறுபாடு இல்லை என்பதே உண்மை. சித்தார்த்தன் அவர்கள் நிலைமையை மேலும் சிக்கலாக்காமல் செயற்படுவதே சிறந்ததாகும். கூட்டணிக் காரியாலயம் படைமுகாம் போல் சித்தார்த்தனுக்கு காட்சி அளித்தால் அது அவரின் விஷமப் பிரசாரத்தின் உச்ச கட்டமே - என்று உளளது.

# ஆப்கானில் புதிய அரசு அமைப்பதில் பாக். செல்வாக்கு செலுத்தமுடியாது

## அமெரிக்கா திட்டவட்டமாக அறிவிப்பு

நியூயோர்க்,ஒக்.26

ஆப்கானிஸ்தானின் ஆட்சிப் பீடத்திலிருந்து தலிபான்கள் அகற்றப்பட்ட பின்னர் அங்கு அமைக்கப்படவிருக்கும் புதிய அரசில் இடம்பெறவேண்டிய குழுக்கள் அல்லது அமைப்புகள் குறித்து பாகிஸ்தான் முடிவு செய்ய முடியாது என்று அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

"ஆப்கானிஸ்தானில் புதிய அரசு அமைக்கும் விடயத்தில் பாகிஸ்தானுக்கோ வேறு எந்தவொரு நாட்டுக்கோ முக்கிய - பெரும் - பங்கு எதுவும் அளிக்கப்படமாட்டாது" - என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின் பவல் தெரிவித்தார்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் சர்வதேச உறவுகள் குறித்த குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே இதனைத்தெரிவித்தார்.

"ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தற்போது நடத்திவரும் போர் முடிவடைந்ததும் அங்கு ஐ.நா. முழு அளவில் பணியில் ஈடுபடுத்தப்படும். சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுடனும் இது குறித்து முக்கிய கலந்துரையாடல்கள் நடத்தப்படும்.

"புதிய, விரிவான அடிப்படையிலான, நிலையான அரசு ஒன்றை ஆப்கானிஸ்தானில் அமைப்பதற்கு பங்காற்றவே அமெரிக்கா விரும்புகின்றது.

"முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்தில் தாக்குதல் நடத்துவதா இல்லையா? என்பது குறித்து விரைவில் முடிவுசெய்யப்படும்" - என்று கொலின் பவல் மேலும் கூறினார். (ம)

அமெரிக்கா விமானங்கள் மூலம் போடும்

# உணவில் நஞ்சு கலக்க தலிபான்கள் திட்டமாம்!

ஆப்கானிஸ்தானில் உள்ள அப்பாவிப் பொதுமக்களுக்காக அமெரிக்கா விமானங்கள் மூலம் போட்டு வரும் உணவுப் பொருள்களில் நஞ்சைக் கலந்து, அந்தப் பழியை அமெரிக்கா மீது சுமத்துவதற்கு தலிபான்கள் திட்டமிடுவதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிகக யுத்த விமானங்கள் ஒரு புறம் குண்டு மழை பொழிய மறுபுறத்தில் அமெரிக்க சரக்கு விமானங்கள் ஆப்கான் பொது மக்களுக்காக உணவுப் பொருள்களையும் குடியிருப்புப் பகுதிகளில் போட்டு வருகின்றன.

தலிபான்களிடமிருந்து ஆப்கான் மக்களைப் பிரிக்கும் தந்திரோபாயத்துடனேயே அமெரிக்கா ஆப்கான் மக்களுக்கு உணவுப் பொருள்களை போட்டு வருவதாகத் தலிபான்கள் கருதுகின்றனர். இதனால் அப்பொருள்களில் நஞ்சைக் கலந்து, அந்தப் பழியை அமெரிக்கா மீது போடுவதற்குத் தலிபான்கள் திட்டமிடுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது.

"அமெரிக்கா மனிதாபிமானம் உள்ள நாடு. மக்களின் உணவில் நஞ்சு கலப்பதென்பதை அது கனவிலும் நினைத்துப் பார்க்காது" என்று அமெரிக்க அரச தரப்பு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் போர் ஆரம்பித்த நாள் முதல் அங்கு எட்டரை லட்சம் தொன் உணவுப் பொருள்களை அமெரிக்கா போட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம)



அமெரிக்கத் தபால் நிலையமொன்றிற்கு வந்துள்ள கடிதங்களில் 'அந்திரெக்ஸ்' கிருமி உள்ளதா என அதிகாரி ஒருவர் மிக அவதானமாக சோதனை செய்கிறார்.

# அமெரிக்க விமானத் தாக்குதல்கள் ஆப்கானிஸ்தானில் மிகத் தீவிரம்

காபூல்,ஒக்.26

ஆப்கானிஸ்தானில் இன்னும் சில வாரங்களில் கடும் குளிர்காலம் ஆரம்பித்துவிடும். அதற்கு முன்னதாக தலிபான்களின் நிலைகளையும் அந்த அமைப்பின் கட்டளைத் தலைமைகளையும அழித்துவிடும் நோக்குடன் அமெரிக்கா தனது வான்வழித் தாக்குதல்களைத் தீவிரப் படுத்தியுள்ளது.

அரபுக்கடல் மற்றும் வளைகுடாக்கடல் பகுதிகளில் தரித்துநிற்கும் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களில் இருந்து புறப்பட்டுச் செல்லும் யுத்த விமானங்கள் ஆப்கான் நகரங்கள் மீது இரவு பகலாகத் தொடர்ச்சியான கடும் குண்டுத் தாக்குதல்களை நடத்திவருகின்றன.

தலிபான்களுக்கு எதிராகப் போரிட்டுவரும் வடக்குக் கூட்டணிப் படையினர் தலைநகர் காபூலை நோக்கி முன்னேறுவதற்கு வசதியாகக் காபூலுக்குக் கிழக்கேயுள்ள தலிபான்களின் முன்னணி இராணுவ நிலைகள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுமாரி பொழிந்து வருகின்றன.

அமெரிக்கப் படையினரின் தாக்குதல்களையும் எதிரணிப் படையினரின் தாக்குதல்களையும் எதிர்கொள்ள முடியாமல் இன்னும் ஓரிரு வாரங்களில் தலிபான்கள் பின்வாங்கிவிடுவர் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கத் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் தலிபான்கள் கிராமப்புற மக்களுக்கு ஆயுதங்களை விநியோகித்து வருகின்றனர்.

அமெரிக்கப் படையினருக்காக உளவு வேலைகளில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை வழங்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

கடந்த 7ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா ஆரம்பித்த தாக்குதல்களினால் இதுவரை 2 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுத் தெரிவித்தது. எனினும் இந்தச் செய்தியை பக்கச் சார்பற்ற தரப்புகள் எவையும் உறுதிப்படுத்தவில்லை. (ம-4)



ஆப்கான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க கார்ல் வின்சன் விமானந்தாங்கிக் கப்பலில் இருந்து புறப்படும் குண்டுவீச்சு விமானம்



ஆப்கான் மீது தாக்குதல் நடத்தவுள்ள விமானத்துக்கு குண்டு பொருத்தப்படுகின்றது.



அமெரிக்க விமானத் தாக்குதலில் சிதிலமடைந்து போய்க் கிடக்கும் ஆப்கானியர் ஒருவரின் வீடு.

# வெள்ளை மாளிகையிலும் 'அந்திரெக்ஸ்' தாக்குதல்

## தான் பாதிக்கப்படவில்லை என்கிறார் புஷ்

நியூயோர்க்,ஒக்26

அமெரிக்க அதிபர் மாளிகையான வெள்ளை மாளிகைக்கு (White House) வந்த கடிதம் ஒன்றிலும் 'அந்திரெக்ஸ்' கிருமி இருந்தமையை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வெள்ளை மாளிகைத் தபால்கள் இடப்படும் பெட்டி ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட கடிதம் ஒன்றில் "அந்திரெக்ஸ்' கண்டுபிடிக்கப்பட்டதை புஷ் அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

எனினும் தான் 'அந்திரெக்ஸ்' தாக்கத்துக்கு உள்ளாகவில்லை என்று அதிபர் புஷ் நாட்டு மக்களுக்குத் தெரிவித்தார். செய்தியாளர்களிடம் பேசுகையில் "எனக்கு 'அந்திரெக்ஸ்' கிருமி தொற்றவில்லை" என்று கூறினார்.

இதேவேளை -

அமெரிக்காவின் நிர்வாகத் தலைநகரான வாஷிங்ரனில் ஐந்தாவது பகுதியில் 'அந்திரெக்ஸ்' தாக்கம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. செனட் அலுவலகக் கட்டடத்தின் பொருள்கள் கையாளும் பகுதியிலேயே புதிதாக 'அந்திரெக்ஸ்' கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று பொலீஸ் பேச்சாளர் டொன் நிக்கலஸ் தெரிவித்தார்.

'அந்திரெக்ஸ்' தாக்கியவர்கள் குறித்த சம்பவங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, அமெரிக்கர்கள் பெற்றுக்கொள்ளும் கடிதங்கள் அனைத்தும் பாதுகாப்பானவை என்று உறுதிப்படுத்த முடியாது என்று அமெரிக்கத் தபால் மா அதிபர் ஜோன் பொட்டர் தெரிவித்தார். (ம-4)



அந்திரெக்ஸ் சோதனையில் அதிகாரிகள்

# 'அந்திரெக்ஸ்"க்கான மருந்தை இந்தியாவில் தயாரிக்க முடியுமாம்

## ஹோமியோபதி மருத்துவர்கள் தெரிவிப்பு

புதுடில்லி,ஒக்.26

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் 'அந்திரெக்ஸ்' கிருமிக்கு எதிரான மருந்தைத் தம்மால் இந்தியாவிலேயே தயாரிக்க முடியும் என்று இந்திய ஹோமியோபதி மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரிஸா மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரி ஒன்றின் ஹோமியோபதி பிரிவின் தலைமை மருத்துவரே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

ஹோமியோபதி வைத்திய முறையில் 'அந்திரெக்ஸ்"க்கு எதிரான சிகிச்சை முறைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் பலருக்கு 'அந்திரெக்ஸ்' கிருமி தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்திய மருத்துவர்களின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# பலஸ்தீனப் பகுதிகளில் தொடர்ந்தும் இஸ்ரேலியப் படைகள் ஆக்கிரமிப்பு!

## புதிய வன்முறைகளில் ஆறு பலஸ்தீனர்கள் பலி!

மத்திய கிழக்கில் இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனப் பகுதிகளைத் தொடர்ந்து ஆக்கிரமித்து வருகின்றனர். ஏற்கனவே ஐந்து பலஸ்தீன நகரங்களை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலியத் துருப்புக்கள் புதிதாக மேற்குக் கரையில் உள்ள பீற் றிமா என்ற பலஸ்தீனப் பகுதியையும் ஆக்கிரமித்துள்ளன. இதன்போது ஏற்பட்ட மோதல்களில் ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மையில் இஸ்ரேலிய சுற்றுலாத்துறை அமைச்சர் ரெஹவம் ஸிவியை படுகொலை செய்த தீவிரவாதிகளைப் பிடிக்கும் நோக்கத்துடனேயே இந்தப் புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டதாக் தாக்குதலுக்குப் பொறுப்பான இஸ்ரேலிய இராணுவக் கேணல் தெரிவித்தார்.

இஸ்ரேலியப் படைகள் கொலைச் சந்தேக நபர்களை கைது செய்த பின்னர் பீற் றிமா பகுதியிலிருந்து வெளியேறிவிடும் என்று இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் தெரிவித்ததார்.

இந்த மோதல்களில் 9 பலஸ்தீனர்கள் உயிரிழந்ததாக பலஸ்தீன அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. அமைச்சர் ஸிவி கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை இஸ்ரேல் ஏற்கனவே கைது செய்துவிட்டது. எனினும் அது தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தாமல் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

பலஸ்தீனப் பகுதிகளை இஸ்ரேலியப் படைகள் தொடர்ந்து ஆக்கிரமிப்புச் செய்து வருவது [illegible] இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் நேற்று தமது அமை[illegible] கூட்டி ஆராய்ந்தார்.



பலஸ்தீனப் பகுதியை ஆக்கிரமித்து நிற்கும் இஸ்ரேலிய டாங்கிகள்.

உலக அரங்கில்

### விமானத்தளம் மீது காஷ்மீரில் தாக்குதல்!

[illegible] ஒக்.26

இந்தியாவின் கா[illegible] மாநிலத்தின் தென் பகுதியில் [illegible] விமானத்தளம் ஒன்றின் மீது [illegible] திங்கட்கிழமை தீவிரவாதிகள் [illegible] கொலைத் தாக்குதலில் தாக்குதலாளிகள் உட்பட 6பேர் கொல்லப்பட்டனர். [illegible]

# தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம்

# 2 ஆம் திகதி முதல் விநியோகம்

## மோட்டார் பதிவுத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) பெறுவதற்கான பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் மோட்டார் பதிவுத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்த வருடத்தில் மட்டும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் 2 ஆயிரத்து 656 பேர் அதற்குத்தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கே எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் முதல் — பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் — தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாக மோட்டார் பதிவுத்திணைக்கள உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் தெரிவித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தகுதிபெற்ற இவர்கள் அனைவருக்கும் கொழும்பில் இருந்து சாரதி அனுமதிப்பத்திரம் வந்து சேரும் வரை எம்மால் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை —

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகள் மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறும் என்றும் —

அதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதியில் இருந்து மோட்டார் பதிவுத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-6)

### மல்லாகம் மாவட்ட

## நீதிமன்ற சான்றுப் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை

யாழ்ப்பாணம், ஒக். 26

மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட சான்றுப் பொருள்களில் இதுவரை உரிமை கோரப்படாத பொருள்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

சைக்கிள்கள், வெற்றுப் போத்தல்கள், பிளாஸ்ரிக் கான்கள், சேலைகள், ஒடுகள், வெற்றுப் பரல்கள் முதலான பொருள்களே ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

(ஐ)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

வலிகாமம் தெற்கு, ஒக். 26

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஒறேற்றர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கல்லூரி அதிபர் க. சிவாஜி தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பௌதிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க. கந்தசாமி இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி ஜெ. மகாதேவன் நிகழ்த்துவார்.

திருமதி சியாமளா கந்தசாமி பரிசில்களை வழங்குவார்.

ஆசிரியர் ஆறு. திருமுருகன் நிறைவுரையாற்றுவார்.

(க-152)

## நூல்கள் விற்பனை

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ். திருமறைக்கலாமன்றத்தினரால் மன்ற அலுவலகத்தில்புதிதாகத்திறந்துவைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையத்தில் கலைமுகம், ஆற்றுகை ஆகிய இதழ்களும், நாடக, கூத்து நூல்களும், ஏனைய இலக்கிய நூல்களும் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

(க-6)

## பனை அபிவிருத்தி சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஒக்.26

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக நா. சந்திரமோகன் வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் மு. பாக்கியநாதன் இந்தப் பதவியை வகித்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-4)

## இசைவகுப்புகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 26

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் புதிய இசை வகுப்புகள் இன்று வெள்ளிக்கிழமை ஆதீன மண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கின்றன.

இதில் பரதநாட்டியம், பண்ணிசை, கர்நாடக சங்கீதம், மிருதங்கம், வயலின் ஆகிய வகுப்புகள் நடைபெறவுள்ளன.

(ம-4)

## மானிப்பாயில் கருத்தரங்கு

பாடசாலை மாணவர்களின் முரண்பாட்டுத்தீர்வு தொடர் நடவடிக்கைக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் நிலையத்தில் நடைபெற உள்ளது.

பாடசாலைகளில் ''வழிகாட்டவும் ஆலோசனை கூறவும்'' என்ற விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள முன்னர் நடைபெற்ற முரண்பாட்டுத் தீர்வுக்கல்விக்கருத்தரங்கில் பங்கு கொண்ட ஆசிரியரை இக்கருத்தரங்குக்கும் தவறாது அனுப்பி வைக்குமாறு வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி கோகிலா மகேந்திரராசா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(க-152)

## திறப்பு விழா

யாழ். இந்துக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப விஞ்ஞான ஆய்வு கூடத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர்க் கல்விக்கோட்ட விஞ்ஞானபாட முதன்மை ஆசிரியர் ச. இரவீந்திரன் விஞ்ஞான ஆய்வுகூடத்தைத் திறந்து வைப்பார். (க 7)

## கவின்கலை வகுப்புகள்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் இரண்டு பாலர் பாடசாலைகளிலும் இன்று வெள்ளிக்கிழமை சங்கீதம், நடனம், வயலின், மிருதங்கம் ஆகிய கவின்கலை வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. இவ்வகுப்புக்களில் பயில விரும்புவோர் அன்றையதினம் பாலர் பாடசாலைகளுக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(க-ரி-152)

## பாடசாலை ஆண்டிறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணக்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி தரம்11 இற்கான பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையும்.

தரம் 6, 7, 8, 10 இற்கான பரீட்சைகள் 15 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையும் —

தரம் 3, 4, 5 இற்கான பரீட்சைகள் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

(க-10-ரி)

### நவம்பர் 20 முதல் டிச. 10 வரை

## அரசாங்க ஊழியர்களின் லீவுகள் அனைத்தும் ரத்து

கொழும்பு, ஒக். 26

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சகல அரச ஊழியர்களையும் கடமையில் ஈடுபடுத்தும் நோக்குடன்—

நவம்பர் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை சகல அரச ஊழியர்களினதும் லீவுகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி அமைச்சு சகல அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்குச் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் லீவு பெற்றிருக்கும் அரச ஊழியர்களது லீவுகளையும் ரத்துச் செய்யுமாறும்—

வழமைபோல் விசேட காரணங்களுக்காக லீவு வழங்கும் அதிகாரத்தை அமைச்சுச் செயலாளர்கள் கொண்டிருப்பர் என்றும்— அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

## உரும்பிராயில் கலந்துரையாடல்

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள உரும்பிராய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 'யுனிசெவ்' நிறுவன உதவியுடனான மலசலகூடம் அமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்ட பயனாளிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கோப்பாய்ப் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் அறிவித்திருக்கின்றார். (க-180)


பசுமாடு காணாமற் போய்விட்டது

கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து பசுமாடு ஒன்று காணாமற் போய்விட்டது. பட்டி பார்த்த கொம்புள்ள, இளஞ்சிவப்பு நிறமுடைய, பால் சுரக்கின்ற பருவமான இப் பசுவைக் கண்டவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு தகவல் தாருங்கள்.

சின்னப்பு சிவலிங்கம் (ரவி)
இல. 40, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(93839)



சோலைக்குயில் அவைக்காற்றுக்களம்
பிரயோக அரங்கு + வலுவூட்டல்
வட - இலங்கைச் சங்கீத சபைப்
பரீட்சை வகுப்புகள்

மீண்டும் இவ் வருடம் சோலைக்குயில்கள் மனசுக்குள்ளே மத்தளம் கொட்ட வருகின்றன!
நீங்களும் கூவப் போகிறீர்களா? இனிமையாக!
உங்களுக்குள் ஒரு மாற்றம் நிகழ வேண்டுமா?
நிச்சயமாய்!
உங்கள் ஆற்றல்கள் முழுமையாய் முகை வெடிக்க வேண்டுமா?

இணையுங்கள் எங்களுடன்
விஜயதசமியன்று - வெள்ளிக்கிழமை - 26-10-2001
மாலை 4. 30 மணிக்கு நாள் வகுப்பு
இடம்:- தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

திருமதி கோகிலா மகேந்திரன்
தலைவர்

தாவடி,
கொக்குவில்.
(93835)



யாழ். மாவட்ட
தனியார் பாரவூர்தி உரிமையாளர்
கூட்டுறவுச்சங்கம் (வ-து)
பாரவூர்தி உரிமையாளர்களுக்கு
முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 28-10-2001 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய விடயம் சம்பந்தமாக ஆராய்வதற்காக பாரவூர்தி உரிமையாளர்கள் அனைவரையும் பாரவூர்திச்சங்க பணிமனைக்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

- நன்றி -

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (93854)

இ. அரிகரன்
கௌரவ செயலாளர்


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சின்னத்துரை

நேற்றைய உதயன் நாளிதழில் 11 ஆம் பக்கம் வெளியான மரண அறிவித்தலின் பிரகாரம் அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெறவில்லை என்பதை அறியத் தருகிறோம். அவரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

செ. கிருஷ்ணராசா
(மருமகன்)

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

(93852)

### சீனியர் இளையதம்பி
(சின்னராசு)

நகுலேஸ்வரா வீதி, கீரிமலையை நிரந்தர வதிவிடமாகவும் முழங்காவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சீனியர் இளையதம்பி 10-10-2001 புதன்கிழமை முழங்காவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர்-ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், சிவனேஸ்வரியின் அருமைக் கணவரும், ரமேஸ்குமார், ரேணுகா, ரவிக்குமார், ரமணன், ரஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் முழங்காவிலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திரு. சீ. இரத்தினம்
(சகோதரன்)

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

(93844)

## உதயன்

### தேர்தல் கால போராட்டங்கள்

குடாநாட்டில் 1996 -1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வீதிகளிலும் வீதிச் சோதனை நிலையங்களிலும் கைதுசெய்யப்பட்டு பின்னர் காணாமற் போன பல நூற்றுக்கணக்கானோர் குறித்து தகவல்களைப் பெற்றுத் தருவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்க வட்டாரங்கள் விசனம் தெரிவித்திருக்கின்றன.

தாம் கொடுத்த மூன்று வாரகால அவகாசத்துக்குள் இது குறித்து அரச அதிபர் சாதகமான பதிலைத் தங்களுக்குத் தராவிட்டால் யாழ்.செயலகம் முன்பாகத் தாம் ஏற்கனவே திட்டமிட்டபடி மறியற்போராட்டம் நடத்தப்போவதாகவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று, வடமராட்சி மற்றும் ஏனைய பகுதிக் கடற்றொழிலாளர்களும், தாங்கள் சுதந்திரமாகக் கடற்றொழில் செய்வதற்கு அனுமதிக்காவிட்டால் குடாநாடு தழுவிய ரீதியில் தமது போராட்டங்களை விஸ்தரிக்கப் போவதாக எச்சரித்திருக்கின்றனர்.

குடாநாட்டில் ஒருபுறம் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்க, மறுபுறம் கோரிக்கைகளும் போராட்டங்களும் சூடுபிடிக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

தற்போதைய, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் தான் அப்பாவிகள் கைது செய்யப்பட்டு காணாமற்போனதாலும் மீன்பிடித் தொழிலுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாலும் மக்கள் அவலத்தை - இழப்புகளை - எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இந்த அரசின் காலத்தில் ஆட்சிக்கட்டில் இருந்த அரசியல்வாதிகள் காலத்துக்குக்காலம வழங்கிய உறுதிமொழிகளை நம்பித்தான் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் நல்லதோர் முடிவுக்காகக் காத்திருந்தனர்.

அதனால்தான், பொதுத்தேர்தலில் இந்த ஆட்சி மாறினாலும் மாறலாம் என்ற கருத்தில், அவர்கள் தங்கள் கோரிக்கைக்கு ஒரு முடிவை, அது தொடர்பாக வாக்குறுதி அளித்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள அவசரப்படுகின்றார்கள்; அதற்காக போராட்ட களத்தில் இறங்க முயல்கின்றார்கள்.

காணாமற்போனோர் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் நடத்தப்படும் விசாரணைகள் கூட மிகவும் மந்த கதியிலேயே நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 8 மாதங்களுக்கு மேலாக இந்த விசாரணைகள் நடைபெறுகின்றன. விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் ஐந்து குழுக்கள் யாழ். வந்து திரும்பிவிட்டன. தற்போது ஆறாவது குழு விசாரணை நடத்துகின்றது. ஆனால் விளைந்த பயன் ஒன்றும் இல்லை - காணாமற்போனோரின் உறவினர்கள் மூன்று, நான்கு தடவைகளுக்குமேல் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணைகளுக்கு முகம் கொடுத்ததைத் தவிர.

மீண்டும், மீண்டும் விசாரணை என்ற பெயரில் அழைக்கப்படுவதால் விரக்தியடைந்துள்ள இவர்கள் இனிமேல் விசாரணைகளுக்குச் செல்வதில் பயனில்லை என்ற முடிவுக்குக் கூட வந்துவிட்டனர்.

இதேபோன்று, தங்களது அன்றாட ஜீவனோபாயத்துக்கு வழியின்றி அல்லலுறும் நமது கடற்றொழிலாளர்களும், தொழில்செய்யும் தமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிக் களைத்துவிட்டனர் - நிவாரணம் என்ற பெயரில் அரைவயிறு, கால்வயிற்றுக்குக் கஞ்சி கிடைத்ததைத் தவிர அவர்களது போராட்டத்தால் அவர்களுக்குப் பயன் ஏதும் கிடைக்கவில்லை.

எனவே இத்தகைய பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள மக்கள் தங்கள் உரிமைகளுக்காக - பாதிப்பால் ஏற்பட்ட இழப்புக்கு நிவாரணம் பெறுவதற்காக - போராடுவது நியாயமே.

தேர்தல் சமயத்தில் அரசியல்வாதிகள் அந்தப் போராட்டங்களை, தங்களது வாக்கு வங்கிகளை வளர்க்கும் திட்டத்துக்கு மட்டும் பயன்படுத்த முயலாமல், உண்மையில் அவர்களுக்கு உரிய நிவாரணம் - உரிமை - கிடைக்க வழிசெய்யப் பயன்படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட இந்த மக்களை தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்திவிட்டு பின்னர் அவர்களின் நலன்களைக் கவனிக்காமல் அந்த விடயத்தைத் தூக்கி வீசுவது அந்த மக்களுக்குச் செய்யும் பெருந்துரோகம் என்பதை அரசியல்வாதிகள் - தேர்தலில் மும்முரமாகவுள்ள பிரமுகர்கள் - கருத்திற்கொள்ளவேண்டும்.

# எமக்கு 120 ஆசனங்களைத் தாருங்கள்; இல்லையேல் ஐ.தே.கவுக்கு வாக்களியுங்கள்!

## பிரதமர் கூறும் ஆலோசனை

கொழும்பு,ஒக்.26

"வரும் பொதுத்தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆட்சியைப்பிடிக்க 120 ஆசனங்களைப் பெறுக்கொடுங்கள். அப்படிச் செய்யாவிட்டால் ஐ.தே.கட்சிக்கு வாக்களிப்பது நல்லது."

- இப்படிக் கூறியிருக்கின்றார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா.

ஹொறணையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாக்காளர்கள் பெரிய கட்சிகளான ஐ.தே.கட்சிக்கு அல்லது பொ.ஐ.முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும். பெரிய சலுகைகளை பிணையாகக் கோரும சிறிய கட்சிகளுக்கு வாக்களிக்கக் கூடாது.

சிறிய கட்சிகள் தமது நோக்கங்களை அடைவதற்காக எல்லை மீறி நிபந்தனை விதிக்கின்றன. இத்தகைய சிறிய கட்சிகள் நாட்டுக்குச் சாபக்கேடு.

பொ.ஐ.முன்னணியின் முன்னாள் பங்காளர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை விதித்ததால்தான் இன்று இந்த நிலைமை ஏற்பட்டது.

- இப்படி பிரதமர் மேலும் தெரிவித்தார். (உ)

# தேர்தல் கடமையில் இம்முறை 65ஆயிரம் பொலீஸார் ஈடுபடுவர்!

கொழும்பு,ஒக்.26

பொதுத் தேர்தலின்போது வடக்கு - கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு 65 ஆயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளதாக பொலீஸ் தலைமையக தேர்தல் பணியகத்தின் பிரதிப் பொலீஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்திலும், வாக்குகள் எண்ணப்படும் தினங்களிலும் தேர்தல் வன்முறைகளைத் தவிர்க்கும் பொருட்டு இந்த 65 ஆயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபடுவார்கள். வரையறுக்கப்பட்ட தமது சட்ட வரம்புகளுக்கு உட்பட்டு தமது கடமைகளை அவர்கள் செய்வார்கள் என்றும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (க)



சண்டிலிப்பாய் ஆலங்குளாய் ஊடான 749 ஆம் இலக்க பஸ் சேவை அண்மையில் வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சேவையில் ஈடுபடும் பஸ்ஸின் முன்பாக பிரதேச சபைத் தலைவர் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை முகாமையாளர், ஆலங்குளாய் சனசமூக நிலைய உறுப்பினர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். *(படம்: மானிப்பாய்ச் செய்தியாளர்)* (ஐ)

## மானிப்பாயில் அறநெறி பாடசாலை

மானிப்பாய்,ஒக்.26

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் விஜயதசமி தினமான இன்று காலை 9 மணிக்கு அறநெறிப் பாடசாலை ஒன்று புதிதாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

தரம் 2 தொடக்கம் தரம் 6 வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இந்த அறநெறிப் பாடசாலையில் அனுமதிக்கப்படுவர் என்றும் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனின் அனுசரணையுடன் ஓய்வுபெற்ற அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையிலான சைவசமய ஆசிரியர் குழுவினர் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை இந்த வகுப்புகளை நடத்துவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(க-7-90)

## நாளை

ஐப்பசி 10
சனிக்கிழமை
திதி : ஏகாதசி
பின்னிரவு 5.31 வரை.
நட்சத்திரம் : சதயம்
பின்னிரவு 12.53 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 3.03 - 4.33
ராகுகாலம் : 9.03 - 10.33
(பழைய நேரப்படி)

## உடுவில் பகுதியில் நேற்றுத் தேடுதல்

உடுவில் லவ்லேன் பகுதி நேற்று அதிகாலை தொடக்கம் காலை 8.30 மணிவரை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு வீடு, வீடாகத் தேடுதல் நடத்தப்பட்டது.

படையினர் ஒலிபெருக்கி மூலம் தமது தேடுதல் நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொண்டனர். தேடுதலின்போது பொதுமக்கள் எவரும் லவ்லேன் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படாததால் வீதியில் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. (க-6)

## கலந்துரையாடல்

உள்ளூராட்சிச் சேவை தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படி சங்கத்தின் பெயரை மத்திய/ மாகாண அரச சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கம் என பெயர் மாற்றம் செய்வது குறித்து கலந்துரையாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(க-7)

## உதயவாக்கு

அன்பு செய்யாதவன் கடவுளை அடைவதற்கில்லை. ஏனெனில் அன்பே கடவுள். கண்முன் காணும் சகல ஜீவன்களிடமும் அன்பு பூணாதவன், காணாத கடவுளிடம் எப்படி அன்பு செலுத்த முடியும்?

*- இயேசு கிறிஸ்து.*

## நாட்டு நடப்பு

### அன்னையைக் காண வாரீர்!



அன்னையைத் தேடி நாளும்
அலைந்திடும் அறிவிலிகாள்
அன்னையை ஒன்பதுநாளில் மட்டும்
அடியார்கள் காணலாமோ?
அன்னைக்குப் பாலும் தேனும்
அவலுமே போதுமாமோ?
அன்னையாள் உளத்தின் உள்ளே
அமர்ந்திருப்பதை அறிவீராகில்
அன்னையாள் உவந்து உவக்க
ஆருயிர்க்கு அன்பு செய்வீர்!
அன்னையவள் அன்பில் தோய்ந்து
அகத்தை விட்டு அகலமாட்டாள்.

*- விகடகவி.*

# சமூக சேவைகள் திணைக்களம் வழங்கிய கண்ணாடிகள் 3 மாதகாலமாகத் தேக்கம்

## உரியவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் குடும்பங்களில் கண்பார்வை குறைந்தவர்களுக்கு வழங்குவதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் யாழ்.அரச செயலகத்தில் கடந்த 3 மாத காலமாக தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகிறது.

கண்பார்வை குறைந்தோருக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக சமூகசேவைத் திணைக்களத்திடம் கடந்த ஜனவரியில் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இந்தக் கண்ணாடிகள் இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கண்ணாடிகளை வழங்க பிரதேச செயலகப் பிரிவுகளில் தகுதியானோரிடம் இருந்து விண்ணப்பங்களும் கோரப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் தயார் செய்யப்பட்டிருந்த போதும்கூட, இதுவரை கண்ணாடிகள் விநியோகிக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணாடிகளை விநியோகிக்காமல் வைத்திருப்பதற்கான காரணத்தை அதிகாரிகள் தெரிவிக்காமல் இருப்பது குறித்தும் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.(ஐ-180)

# பதுங்கியிருந்த படையினர்மீது கிண்ணியடியில் புலிகள் தாக்கு!

## அதிகாரி ஒருவர் காயம்

மட்டக்களப்பு,ஒக்.26

மட்டக்களப்பு மாவட்டம் கிண்ணியடியில் பதுங்கியிருந்த படையினர் மீது நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படை அதிகாரி ஒருவர் காயமடைந்தார்.

அந்தப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற ஒருவரை இந்தத் தாக்குதலின் பின்னர் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து கும்புறுமூலை அதிரடிப்படை முகாமில் இருந்து கிண்ணியடிப் பகுதியை நோககி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் அங்கு பாடசாலைகள் நடைபெறவில்லை என்றும் -

மக்கள் பீதியினால் பதறியடித்துப் பாதுகாப்புத் தேடி ஓடினர் என்றும் -

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. (ம-3)

# சிவில் நிர்வாக அலுவலகம் பயணிகளுக்கு அறிவுறுத்தல்!

யாழ்ப்பாணம்,ஒக்.26

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வோருக்கு சிவில் நிர்வாக அலுவலகத்தினால் வழங்கப்படும் மஞ்சள்நிறப் பயண அனுமதிப்பத்திரத்தைப் பயணிகள் தம்முடன் எடுத்துச்செல்ல வேண்டும் என்றும் -

கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அவர்கள் தங்குவதற்கு வேண்டிய அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அந்த ஆவணம் மிக அவசியமானது எனவும் -

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த மஞ்சள்நிற அனுமதிப்பத்திரத்தைப் பயணத்தின் பின் தொலைத்துவிட்ட பலர், அவர்கள் சென்ற இடங்களில் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்க நேர்ந்துள்ளதாகவும், எனவே அவற்றைத் தவிர்க்கும் முகமாக அந்த ஆவணத்தை எப்போதும் தம்மோடு வைத்திருக்க வேண்டும் என்றும் பயணிகள் கேட்கப்பட்டிருக்கின்றனர். (ஐ)


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய புனருத்தாரணக்குழு

# அறிவித்தல்

மேற்படி ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகள் மிகவும் சிறப்பாகவும், துரிதமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணி இனிதே விரைவில் ஈடேற அடியார்களின் அன்பளிப்புகளுக்கு அன்புக்கரம் நீட்டி நிற்கின்றோம். தங்கள் அன்பளிப்புக்களை, ஆலயக் காரியாலயத்தில் செலுத்தி தவறாது பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படியும் -

இத்திருப்பணிக்கு இதுவரை நீங்கள் யாரேனும் வழங்கிய பணத்துக்கோ அன்றி பொருளுக்கோ திருப்பணிப் பற்றுச் சீட்டு வழங்கப்படாது இருந்தால் மன்றின் கட்டளைப்படி நிதிக்குப் பொறுப்பான திரு. இராஜதேவனுடன் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளும்படியும் -

இதுவரைகாலமும் நேர்மையாக - முறையாக - திருப்பணிக்கான நன்கொடைகள், அன்பளிப்புகள், அவற்றுக்கான பற்றுச்சீட்டுக்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை நடத்தி, எதிர் வரும் 16.11.2001 க்கு முன் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மன்றின் பதிவாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் திருப்பணி அன்பளிப்புகள் சம்பந்தமான தகவல்களை அளிக்க விரும்புவோர் திருப்பணிக் குழுவினருடனோ அல்லது மன்றின் பதிவாளருடனோ தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ந.இராஜதேவன்,
51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்,
புனருத்தாரணக் குழு.

(93849)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2001 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர்களான எமது நிலையத்தைச் சேர்ந்த

**செல்வன் குணபாலசிங்கம் சஞ்சீப்**

அவர்களையும்

மற்றும்

★ **ஜெயக்குட்டி ரம்யா** ★ **குலேந்திரன் நிலாநிதி**

ஆகியோரையும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களை ஊக்குவித்து நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கு நன்றி கூறியும் வாழ்த்துகின்றோம்.

*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமனாறு.*

தலைவர்,
கலையரசி சனசமூக நிலையம்.

(93836)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 - 01 - 1932



மறைவு
26 - 10 - 1999

### அமரர் சு.சிறிபாஸ்கரன்


அன்புக்கோர் இலக்கணமாய் வாழ்ந்த அமரர் சு. சிறிபாஸ்கரன் அவர்களின் உருவச்சிலை எதிர்வரும் (31-10-2001) புதன்கிழமை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க முன்றிலில் திறந்து வைக்கப்படும்.

*மல்லாகம்.* (93821)

*தகவல்:*
திருமதி பா.சிறிபாஸ்கரன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 - 05 - 1921



மறைவு
06 - 11 - 2000

அமரர்

### இளையதம்பி நாகலிங்கம் கந்தையா

*(E.N.K, நாரந்தனை)*

திதி:26.10.2001

நிலையில்லாத இவ்வுலகத்திலே
நீங்காத நினைவை மட்டும்
எமக்குத் தந்து விட்டுச்சென்று
ஓராண்டு நிறைவுறும் வேளையிலே
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
"ஓம் சாந்தி"

*55A, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/18846)

- குடும்பத்தினர்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடுகள் விற்பனைக்கு

33, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் இரு வீடுகள் விற்பனைககு உண்டு. இரண்டினதும் விலை ரூபா 18 லட்சம் மட்டுமே. பார்வையிட்ட பின்பு பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: சுறாஜ் சோமசுந்தரம், 25, சில்வெஸ்ர வீதி, கல்கிசை (கொழும்பு). தொலைபேசி - 074 - 201582, 01-728767. (C/18718)

### புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர், இறைச்சிக் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். நா.துரைசிங்கம், கோப்பாய் வீதி, உரும்பிராய். (93842)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) 1kg 150/=. சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப்பட்டது 1kg 240/=. தொடர்பு: கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (93843)

### பொய்யாமொழி ஜோதிடம்

பொய்யாமொழி ஜோதிடம் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். செவ்வாய், சனி நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலிலும் ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (93853)

### தவறிவிட்டது

வளாக வீதி, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கணேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.731023964V), விசேட அடையாள அட்டை என்பன 23-10-2001 செவ்வாய்க்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.148, கஸ்தூரியார் வீதியிலுள்ள பிள்ளையார் அப்பளக் கம்பனியில் ஒப்படைத்துதவவும். (93849)

### நீதிமன்றில் ஆஜராக மறுப்பு

நெல்லியடி,ஒக்.26

விழிப்புக் குழுவினரிடம் சிக்கும் திருடர்கள் சார்பில், பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜராவதற்கு பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் மறுப்புத தெரிவித்துள்ளது.

வடமராட்சி விழிப்புக்குழு கொத்தணி நிர்வாகிகள், இது குறித்து பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி சிவா - பாலேந்திரா, என். தங்கராசா ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். (க-107)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*கரவெட்டி, அந்தணத்திடல் பொக்கணை வைரவர்*

ஆலய கட்டட புனரமைப்புக்காக ரூபா 1,50,000/= நிதி ஒதுக்கீடு செய்து, அதில் ரூபா 75,000/= தந்துதவியமைக்காக,



*வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு – கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு*

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

*அவர்களுக்கும்*



*யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர்*

**திரு.கா.வே.குகேந்திரன்** (ஜெகன்)

*அவர்களுக்கும்*

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர்களாகிய

**திரு.ப.ரவீந்திரன்** (ராசிக்) அவர்களுக்கும்
**திரு.A.ஜெயசீலன்** (ஜெயம்) அவர்களுக்கும்

*எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*பொக்கணை வைரவர் ஆலயம்,*
*அந்தணத்திடல்,*
*கரவெட்டி.*

(93848)

ஆலய பரிபாலன சபையும்
அவ்வூர் மக்களும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### இணுவில் எவறெஸ்ற் கல்வி நிலையம்

2001 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களையும் வெட்டுப் புள்ளியை அண்மித்த மாணவர்களையும் அவர்களுக்குச் சிறந்தமுறையில் வழிகாட்டிய ஆசிரியர் திரு. அ. அருட்பிரகாசபிள்ளை அவர்களையும் ஆசிரியைகள் செல்வி கு. பாரதி, செல்வி ம. சோபனா ஆகியோரையும் இவர்களை ஒழுங்குசெய்த இயக்குநர் இ. பாலச்சந்திரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

மாணவர் பெயர், வெட்டுப்புள்ளி

| | | | |
|---|---|---|---|
| 1. யோ.துர்க்காயினி | 149 | 12. ஸ்ரீ.ஜெனார்த்தனன் | 132 |
| 2. க.சோபிகா | 148 | 13. ம.டர்சா | 132 |
| 3. வெ.தயாளினி | 141 | 14. சி.சர்மிளன் | 130 |
| 4. கு.தர்சிகா | 142 | 15. ஸ்ரீ.வேணுகாணன் | 128 |
| 5. செ.சஞ்சீவன் | 142 | 16. வி.துவாரகா | 127 |
| 6. ச.சஜீவன் | 137 | 17. வ.தணகோபி | 126 |
| 7. அ.ரம்ஜா | 136 | 18. யோ.தர்சிகா | 125 |
| 8. ஜெ.டுஸ்யந்தி | 135 | 19. அ.அருந்ததி | 124 |
| 9. வே.அஜந்தினி | 133 | 20. இ.அதித்தியா | 121 |
| 10.த.ஜெனோஸினா | 133 | 21. ச.கபிலவாக்சன் | 121 |
| 11.சி.இராகவசொருபன் | 133 | | |

பெற்றோர் சார்பில் வாழ்த்துபவர்:
**'விதுஜா'**
**சுப்பர் மார்க்கட் அன் கொமினிக்கேசன்**
**070 - 21 - 2216 (உள்ளூர்)**
**0094 - 70 - 21 - 2216 (வெளியூர்)**
**கே.கே.எஸ். வீதி, இணுவில் சந்தி**

(93834)


## தேசிய சேமிப்பு வங்கி அறிமுகப்படுத்தும் சேமிப்பு வைப்புகளுக்கான

# பரிசுத்திட்டம்

☆ கவர்ச்சிகரமான பரிசில்களை வெல்வதற்கும்
☆ சேமிப்பினை ஊக்குவிப்பதற்கும்

சேமிப்புக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு 2 மில்லியன் பெறுமதியான பரிசில்களை வெல்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது.

முதலாம் பரிசு — ரூபா 500,000/- பணப்பரிசு
இரண்டாம் பரிசு — ரூபா 10,000/- பணப்பரிசு
*100 அதிர்ஷ்டசாலிகளுக்கு*
மூன்றாம் பரிசு — ரூபா 500/- பெறுமதியான ரிதீரேகா
*100 அதிர்ஷ்டசாலிகளுக்கு*

☆ மேற்படி சீட்டிழுப்பானது புஞ்சிஹப்பன்/ஹப்பன்/ இத்துருமித்துரு/சாதாரண சேமிப்புக் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே சார்பானதாகும்.
☆ மேற்படி கணக்குகளில் குறைந்த பட்சம் ரூபா 15,000/-தை *ஒக்ரோபர் 15 முதல் டிசெம்பர் 31 வரையிலான* காலப்பகுதியில் வைப்பிலிட்டு, மூன்று மாத காலத்துக்கு மீளப்பெறாதவர்கள் இச்சீட்டிழுப்பில் பங்குபற்றத் தகுதியுடையவர்களாவர்.
☆ ஒவ்வொரு 15,000/-வுக்கு ஓர் அதிர்ஷ்ட எண் என்னும் அடிப்படையில் கூடுதலான தொகையை வைப்பிலிடுவதன் மூலம் அதிர்ஷ்டத்திற்கான வாய்ப்பினை அதிகரிக்க முடியும்.
☆ ஏப்ரல 2002ஆம் ஆண்டில் இச்சீட்டிழுப்பானது நடைபெறும்.

NSB தேசிய சேமிப்பு வங்கி உங்கள் குடும்ப வங்கி

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம்.

(C/18849)

## விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு என்ற
# ஐ.தே.க. மீதான அவதூறு பிரசாரங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

கொழும்பு,ஒக்.26

விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், தமது கட்சிக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக் கூறி, மேற்கொள்ளப்பட்டுவரும் அவதூறான பிரசாரங்களுக்கு எதிராக ஐ.தே.கட்சி நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

ஐ.தே.கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு எதிராக இந்த மனுவைத் தாகல் செய்துள்ளார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக ஐ.தே.கட்சிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டிருப்பதாகவும் -

ஐ.தே.கட்சியின் சார்பில் இம்முறை தேர்தலில் போட்டியிடுவோர் புலிகளின் முகவர்கள் என்றும் -

அரச கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டுவருகின்றன.

எனவே இந்த உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டமைக்காக சம்பந்தப்பட்டோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், லேக்ஹவுஸ் பத்திரிகைகளின் இந்தச் செயல் தொடர்பாக இலங்கைப் பத்திரிகைக் கவுன்ஸில், இலங்கை அரசின் ஊடக ஒழுங்கமைப்புக்குழு, அதன இயக்குநர், லேக்ஹவுஸ் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்ட மாஅதிபருக்கு இது தொடர்பான நெறிப்படுத்தல்களை வழங்கவேண்டும்.

லேக்ஹவுஸ் பத்திரிகைகள் வெளியிட்டுவரும் உண்மைக்குப் புறம்பான செய்திகள் மக்களைப் பிழையான வழிக்கு இட்டுச்செல்வதுடன், கட்சிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகின்றன.

அதேசமயம், மற்றைய கட்சிகளை மிக மோசமாகத் தாக்குவதன்மூலம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குச் சார்பாகவும் இவை செயற்பட்டு வருகின்றன என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அவதூறுச் செய்திகள் வெளியிடுவதை உடனடியாக நிறுத்துமாறு லேக்ஹவுஸ் நிறுவனத்தை தேர்தல் ஆணையாளர் கோருவதற்கான உத்தரவை அவருக்கு வழங்குமாறும் இந்த மனுவில் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். (க-7)

# ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரி ரணிலை திடீரெனச் சந்தித்தது ஏன்?
## அமைச்சர்கள் மத்தியில் குழப்பம்

கொழும்பு,ஒக்.26

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்ன ஐ.தே.கட்சித் தலைவருடன் மேற்கொண்ட சந்திப்புக் குறித்து தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அமைச்சர்கள் குழப்பமடைந்துள்ளனர் எனச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவர் எனக் கருதப்பட்ட நிஹால் கருணாரத்ன, அரசியலில் பாதகமான நிலைமை நிலவும் இவ்வேளையில், ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த சம்பவமானது பலத்த சந்தேகத்தை உருவாக்கியுள்ளது என அந்த அமைச்சர்கள் கருதுகிறார்கள் என்றும் -

இது குறித்து விசாரிக்குமாறு அந்த அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர் என்றும் - அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)


# தெய்வீக ஸ்தலங்களில்....



சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய அலங்கார உற்சவம் அண்மையில் இடம்பெற்றது. அலங்கரிக்கப்பட்ட பெருமானுக்கு ஆலயப் பிரதமகுரு கி.சோதீஸ்வரக்குருக்களும் ஏனைய குருமாரும் பஞ்ச ஆராத்தி செய்வதைப் படத்தில் காணலாம்.
*(படம்: சுன்னாகம் செய்தியாளர்)*



கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்தில் அண்மையில் முதன்முதலாக கொடியேற்றத் திருவிழா நடைபெற்றது.
பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் தம்பபூசை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (க-152)



உரும்பிராய் வடக்கு ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் ஆலய இரதோற்சவம் அண்மையில் நடைபெற்றது. பக்தர் வெள்ளத்தின் நடுவே சுவாமி தேரில் ஆரோகணித்து வரும் காட்சி. (ஐ)



அல்லைப்பிட்டியில் உள்ள மெதடிஸ்த திருச்சபை அண்மையில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அருட்சகோதரி இ.ஜெயக்குமாரி நாடா வெட்டி குருமனையைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். சபைத் தொண்டர்களும் படத்தில் உள்ளனர். (ஐ)

# பாரெல்லாம் பரந்து விளங்கி அருள்தரும் அன்னை பராசக்தி

இமயமலை போன்ற சனாதன தர்மத்தில் இருந்து பல திசைகளில் பாய்ந்தோடும் நதிகள்தான் ஷண்மதங்கள் ஆகும். அதில் சாக்த மதமும் ஒன்றாகும். இதன் முழுமுதல் தெய்வம் அன்னை பராசக்தி. சைவம், வைஷ்ணவம் போன்று சாக்தமும் பழைமை வாய்ந்ததாகும். சிந்து வெளி நாகரிககாலம் வேதகாலம் ஆகிய காலப்பகுதிகளில்கூட சக்தி வழிபாடு நிலவியுள்ளமைக்குப் புதைபொருள்கள் ஆதாரமாகவுள்ளன.



நதிகளின் சங்கமஸ்தானம் சமுத்திரமாகும். அதேபோல் மதங்களின் சங்கமஸ்தானம் சாக்த மதமாகும் என அவதார புருஷரான ஸ்ரீராம கிருஷ்ணர் அம்பிகையின் மதத்தைச் சித்திரிக்கின்றார்.

இன்று சாக்தர்களால் மட்டுமன்றி அனைவராலும் போற்றப்படும் அம்பிகையானவள் அனைவருக்கும் தன் கருணை மழையைப் பொழிந்து வருவதற்காக ஓர் இடத்தில் இல்லாமல் உலகெங்கும் பரந்து பல நாமங்களுடன், பல வடிவங்களில் காட்சி தந்து அருள்பாலிக்கின்றாள். தாய் தன் குழந்தை எக்குற்றம் செய்தாலும் மன்னித்துத் துன்பம் அடைய விடாது கருணை பொழியும் உள்ளம் கொண்டவள். அதேபோல அம்பிகையானவள் பல ரூபங்களில், பல நாமங்களோடு கூடவிருந்து கருணை கடாட்சியாக அடியார்களைக் காத்து அருள்கின்றாள்.

சக்தி எல்லா இடங்களிலும் இருந்து எல்லாவற்றையும் பார்க்கிறாள் என்றும், அவளே கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு இன்பத்தைக் கொடுக்கிறாள் என்றும், துன்பத்தை விலக்கி மோட்சத்தைக் கொடுக்கிறாள் என்றும், கடன தொல்லைகளில் இருந்து நீக்குபவள் என்றும், செல்வத்தைத் தருபவள் என்றும், அவளே ராத்திரிதேவி என்றும், உஷாதேவி என்றும், அம்பிகையை ராத்திரி ஸூக்தம் வர்ணிக்கின்றது.

ஆதியில் தோன்றியவளும் உலகத்தைப் படைத்தவளும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோரைத் தோற்றுவித்தவளும் தேவியே ஆகும் என பஹ்வருசோபநிஷத் கூறுகிறது. பாவனோபநிஷத் அம்பிகையின் கையிலுள்ள ஆயுதங்களைப் பின் வருமாறு கூறுகின்றது. ஐந்து தன் மாத்திரைகள், ஐந்து புஷ்ப பாணங்கள் என்றும், கரும்புவில் மனம் என்றும் பாசம், ஆசை ஆகிற கயிறு என்றும், அங்குசம், துவேஷம் என்றும் அம்பிகையின் கையிலுள்ள ஆயுதங்களுக்கு விளக்கம் கூறுகின்றது.

அம்பிகை தனது கரங்களில் பல ஆயுதங்களை வைத்திருந்து எந்தவொருவரும் குற்றமிழைக்கக் கூடாது என்றும் அவ்வாறு குற்றம் இழைத்தவர்களைத் தனது ஆயுதங்களால் தண்டிப்பாள் என்றும், மிகையான ஆசை உள்ளவர்களைத் தனது பாசக் கயிற்றினால் கட்டியும், மனதில் துவேஷம் வைத்திருப்பவர்களை அங்குசத்தால் களைந்தெறிந்தும் இவ்வாறு பல ஆயுதங்களைத் தாங்கி அனைவரையும் நல்வழிப்படுத்தும் வகையில் தேவியின் திருவுருவம் காட்சி தருகின்றது என்பதை மேற்கூறிய உபநிஷதத்தின் மூலம் அறியமுடிகிறது.

அம்பிகை தனது இரு கரங்களில் எந்தவொரு ஆயுதங்களையும் ஏந்தாதவண்ணம், அபய, வரத கரங்களாக வைத்திருக்கின்றாள்.

அனைவரும் தன்னை ஆராதித்து அருள் பெற வேண்டும் என அம்பிகையானவள் பாரத தேசத்தில் சிறப்பாகக் காஞ்சியில் ஏகாம்பரநாதரோடு காமாட்சியாகவும், சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜரோடு கூட சிவகாம சுந்தரியாகவும், காசிஷேத்திரத்தில் விஸ்வநாதரோடு உறையும் விசாலாட்சியாகவும், மதுரையில் சோமசுந்தரப் பெருமாள் நாயகியாக மீனாட்சியாகவும், ஜம்புகேஸ்வரத்தில் அகிலாண்டேஸ்வரி தண்டினியாகவும், சிருங்கேரியில் சாரதாவாகவும், மைசூரில் சாமுண்டேஸ்வரியாகவும், கேரளாவில் பகவதியாகவும், அருள்பாலிப்பதோடு இலங்காபுரியில் கேதீஸ்வர நாதரோடு கௌரிஅம்பாளாகவும், கோணேசநாதரோடு கூட மாதுமையாகவும், நகுலேஸ்வரரோடு நகுலாம்பிகையாகவும், முன்னேஸ்வரப் பெருமானுடன் வடிவாம்பாளாகவும் இன்னும் உலகெங்கும் பல இடங்களில் பல நாமங்களில் தனித்தும், சிவனுடன் சேர்ந்தும் அருளாட்சி புரிந்து வருகின்றாள்.

தேவிபாகவதம், பிரம்மாண்ட புராணம், தேவி மகாத்மீகம், மார்க்கண்டேய புராணம், ஆகம ரகசியம், சம்கிதை, யாளமம், தந்திரம், பாசுவதம் போன்ற நூல்கள் மூலம் அம்பிகையின் சிறப்புக்களை அறியமுடிகின்றது. இன்று அம்பிகையின் பூஜை வழிபாட்டு முறைகள் "பரசுராம கல்ப சூத்ரம்" என்னும் நூலின் பிரகாரம் வந்தவையே ஆகும். எங்கும் நிறைந்து அருள்பாலிக்கின்ற அம்பிகையினைத் தினமும் வழிபாடாற்றி சுகபோகமிக்க பெருவாழ்வு வாழ்வோமாக.

**சபா. வாசுதேவசர்மா**

☆

### நர்த்தனம் புரிவாய் தாயே!

*அகரமுதல் எழுத்தெல்லாம் - அறிவாகி*
*ஆயகலையாகி கலையின் மகளாகி*
*கவிஞர் துணையாகி கவிதைப் பொருளாகி*
*கற்றோர் நாவில் உறையும் மகளாகி*
*படைப்போன் விழி எட்டும் நிறையும் பொருளாகி*
*வேதப்பொருள் எங்கும் கலந்த அறிவாகி*
*கல்விச்சாலைகள் தோறும் கருவான தேவதேவி*
*உந்தனை நினைந்துருகும் எங்களின் வாழ்வில்*
*என்றும் அறியாமை இருள் அகற்றி - நாவில்*
*நர்த்தனம் புரிவாய் தாயே!*

*-சிவராகினி-*

ஞானக்கதிர்

# முதலாவது பிறந்ததின வாழ்த்து




## செல்வன் சதீஸ் வினுஷன்

26-10-2001

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

**சதீஸ் - சுஜிதா**

தம்பதியினரின் தவப் புதல்வன்

**செல்வன் வினுஷன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (26-10-2001) வெள்ளிக் கிழமை இந்தியாவிலுள்ள இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் வினுஷனை கனடாவிலுள்ள அப்பா, இந்தியாவிலுள்ள அம்மா மற்றும் அம்மம்மா, அப்பம்மா, கனடாவிலிருக்கும் மாமா, மாமி, பேரன், பேர்த்தி மற்றும் இலங்கையிலுள்ள அம்மப்பா, சித்திமார், மாமாமார் ஆகியோர் பல்கலையும் கற்று சீருஞ்சிறப்புடன பல்லாண்டு காலம் நல்வாழ்வுவாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
*கம்பர்மலை.* (93638) வ.சர்வானந்தம்.



வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!
தீபாவளியை முன்னிட்டு
**மாபெரும் மலிவு விற்பனை**
இன்றே நாடுங்கள்!

## லைடன் புடைவை நிலையம்

24.10.2001 முதல் 14.11.2001 வரையும் சகலவிதமான புடைவைகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**லைடன் புடைவை நிலையம்,**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

T.P. - 2381 (C/18832)



யா/மல்லாகம் மகாவித்தியாலயம்

## பரிசளிப்புவிழா - 2001

எமது பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்புவிழா நாளை (27-10-2001) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திரு. மா. நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெறும்.

*இவ்விழாவில் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்*
உயர்திரு.கா.சந்திரபாலன் அவர்கள்
பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்களை வழங்குவார்.
அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்.
(தனிப்பட்ட அழைப்புகள் வழங்கப்படமாட்டாது எனத் தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.)

அதிபர், ஆசிரியர்கள்,
(93813) மாணவர்கள்.



## வள்ளியம்மன் திருமணப் படலமும் கந்தபுராண பூர்த்தியும்

அன்புடையீர்!

நாளை மறுதினம் (28-10-2001) ஞாயிற்றுக்கிழமை வள்ளியம்மன் திருமணப்படலமும் கந்தபுராண பூர்த்தியும் சிறப்பாக நடந்தேற இறையருள் வேண்டுகிறோம்.

அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு மூலவர் பூசை ஆரம்பமாகி கந்தபுராணபடலம் தொடரும். பிற்பகல் 4.00 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக எழுந்தருளி அடியார்க்கு அருள்பாலிப்பார்.

அத்தருணம் பௌராணிகர்களும் ஆர்வலர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!

பரிபாலன சபையார்,
**தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்.**
கரவெட்டி. (93790)


## பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.26

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களின் பாராட்டுவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய அதிபர் சு.யோகராசா தலைமையில் வித்தியாலயத்தின் பொன்னுத்துரை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் பிரார்த்தனையுரையை அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரும், நிகழ்வின் தொடக்கவுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப.கோபாலகிருஷ்ணஐயரும், வாழ்த்துரைகளை முன்னாள் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் வி.அரியநாயகம், கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ம-10)

## தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு,ஒக்.26

கொழும்புத் துறைமுகத்தின் போக்குவரவுப் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏழு விமான எதிர்ப்புத் தோட்டாக்களை விமானப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

துறைமுகப்பகுதியில் விமானப் படையினர் நடத்திய திடீர் சோதனையின்போது வெடிப் எரிபொருள் ரயலில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துறைமுகப் பகுதியில் ஒரு தாக்குதலை நடத்தவே இவை மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என விமானப் படையினர் சந்தேகிக்கின்றனர். இவை எவ்வாறு துறைமுகப்பகுதிக்குள் வந்துள்ளன என்பதுகுறித்து அதிகாரிகள் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ஐ)

## வெடி குண்டு விபத்தில் 3 படையினர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

பண்டாரவளையிலுள்ள இராணுவப் பயிற்சிமுகாம் ஒன்றில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 3 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இவர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தசமயம் குண்டு தவறுதலாக வெடித்ததாகக் கூறப்பட்டது. (ம-4)

## தேர்தல் வன்முறை 31 முறைப்பாடுகள்

கொழும்பு,ஒக்.26

வேட்பாளர் பட்டியல் தாக்கல் செய்யும் நடவடிக்கை ஆரம்பமான பின்னர், 31 தேர்தல் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகப் பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதில் 18 முறைப்பாடுகளை ஐ.தே.கட்சியும் 10 முறைப்பாடுகளை பொ.ஐ.முன்னணியும் 3 முறைப்பாடுகளை ஏனைய கட்சிகளும் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மட்டும் 15 தேர்தல் முறைப்பாடுகள் செய்யப்பட்டதாகவும்கூறப்படுகிறது. (ம-4)

## சைவ பரிபாலன சபை நடத்தும் பேச்சுப் போட்டி

யாழ்.ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ். சைவபரிபாலன சபையினர் நடத்தும் பேச்சுப் போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளின் மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குகொள்வர் என்று சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

இதேவேளை -

எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ள சைவநெறித் தேர்வுக்குரிய ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டுவிட்டதாகவும் -

சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு சுட்டிலக்கம், கைபொப்பப்படிவம் என்பன அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெறாதோர் தேர்வுச் செயலாளரோடு தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

அவர்மேலும் தெரிவித்தார்.(க-7)


தாழாத்துயர் சுமக்கும்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| நயினை மண்ணில் | முருகன் திருவடியில் |
| 1957 - 06 - 12 | 2000 - 11 - 06 |

மனைத்தக்க மாண்புடையாள்
*நயினை திருமதி* **யோகேஸ்வரி குலாஆனந்தன்**
*(இராசாத்தி)*
திதி:-26.10.2001
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூஷனி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*30/4, சீனிவாசகம் வீதி, கொட்டடி.*
பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், தாய், (93816) சகோதரங்கள், உறவினர்கள்.



## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| 1909 - 09 - 27 | 1993 - 10 - 26 |

**அமரர் யோண் பிலிப்**
*(மலேயன் பென்சனர், ஒட்டகப்புலம்)*

அளவற்ற இரக்கம் நிறைந்த தந்தையே! உம்மில் விசுவாசம் வைத்து வாழ்ந்து இறந்து போன யோண் பிலிப்புவுக்கு நித்திய சாந்தியை அளித்தருளும்

இவரின் ஆன்ம சாந்திக்காக இன்று (26-10-2001) வெள்ளிக்கிழமை மாலை 5.00 (புதிய நேரம்) மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*243, மருத்துவமனைச் சாலை, யாழ்ப்பாணம்.*
*T.P. 021-3302.* (93755) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## ஓராண்டு நினைவலைகள்

26-10-2001



| | |
|---|---|
| மண்ணில் | விண்ணில் |
| 27 - 04 - 1939 | 06 - 11 - 2000 |

அமரர்
**கந்தையா இராஜரட்ணம்**

*காலமெல்லாம் கட்டிக்காத்த கண்ணாளனே*
*கலங்குகிறேன் கடந்த ஓராண்டாக!* *(மனைவி)*
*எம்மை பெற்றெடுத்துப் பாசமுடன் வளர்த்த தந்தையே!*
*நாங்கள் கண்ணீர் வெள்ளத்தில் அழுந்தித் தவிக்கிறோம்!* *(பிள்ளைகள்)*
*அன்புள்ளம் கொண்ட ஆசை மாமாவே!*
*எம்மை விட்டு எங்கு நீர் சென்றீர்?* *(மருமக்கள்)*
*சின்னஞ்சிறிசுகள் நாம் பேரப் பிள்ளைகள்*
*தாத்தாவின் நினைவால் வாடுகிறோம்!* *(பேரப்பிள்ளைகள்)*
*ஊராரும் உற்றாரும் உறவினரும் நாமும்*
*நின் நினைவால் தவிக்கின்றோம்*
*ராஜாதி ராஜனே! இராஜரட்ணமே!*
*ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் தான் மறைந்தாலும்*
*ஓயாள். இராசாவே உம் நினைவலைகள்*
*எம் நெஞ்சங்களை விட்டு அகலவே அகலாது.*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

*கோட்டைக்காடு, மல்லாகம்.* (93516) அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

# ஆசிரிய கலாசாலைகளுக்குப்பதில்

# ஆசிரிய கல்வி நிலையங்கள்

## நாடு முழுவதும் 84 இடங்களில் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

ஆசிரிய கலாசாலைகள் யாவும் அடுத்தாண்டு தொடக்கம் ஆசிரிய கல்வி நிலையங்கள் எனப்பெயர் மாற்றம் பெற்று இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இலங்கையில் உள்ள 16 ஆசிரிய கலாசாலைகளும் மூட்ப்பட்டு பாடசாலைகளில் கல்வி போதிக்கும் பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்குத் தொகுதி தொகுதியாகப் பயிற்சி அளிக்க நாடு முழுவதும் 84 ஆசிரிய கல்வி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இலங்கையில் மொத்தமாக 16 ஆசிரிய கலாசாலைகள் உள்ளன. இவற்றில் 11 சிங்கள மொழிமூல ஆசிரிய கலாசாலைகளும், 5 தமிழ் மொழி மூல ஆசிரிய கலாசாலைகளும் அடங்கும்.

இதேவேளை—

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதாலும் அவற்றை உடனடியாக நிரப்பவேண்டிய தேவை இருப்பதாலும் வடக்கு-கிழக்கில் உள்ள அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, கொட்டகலை மற்றும் யாழ். மாவட்டத்தில் கோப்பாய், பலாலி ஆகிய ஐந்து ஆசிரிய கலாசாலைகளும் உடனடியாக ஆசிரிய நிலையங்களாக மாற்றப்பட வாய்ப்பு இல்லை என்றும் —

தற்போதுள்ள நிலையிலேயே அவை அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகள் தொடர்ந்து இயங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-180)

# 'உள்ளம்' நூல் வெளியீடு

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சமூக நிலையமும் இணைந்து வெளியிடும் 'உள்ளம்' வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதபிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசுவும் சிறப்பு விருந்தினர்களாக இளம் எழுத்தாளர் அ. அரவிந்தன், தி. செல்வமனோகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ். கூட்டுறவுப் பரிசோதகர் நா. தவநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். இந் நிகழ்வில் விவாத அரங்கு, நகைச்சுவை நாடகம் ஆகியன இடம்பெற உள்ளன.

(ஒ-4)

### கிராம அலுவலர்கள் மூலம்

# மரணமான வாக்காளர் விவரங்கள் திரட்டும் நடவடிக்கை ஆரம்பம்

வலி, வடக்கு, ஒக். 26

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் மரணமானவர்களின் (வாக்காளர்களின்) பெயர், விவரங்களை அனுப்பி வைக்கும்படி யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

கிராம அலுவலர்களுக்கு இது பற்றிய சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தவர்களில் மரணமானவர்களின் விவரங்களையே அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணம் அடைந்தவர்களின் வாக்காளர் அட்டைகளைத் தவறான வழிகளில் பயன்படுத்தாமல் இருப்பதற்காகவே இத்தகைய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரியவருகின்றது.

அரசமைப்பு திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் இறுதி நேரத்திலும் மரணம் அடைந்தவர்களின் பெயர்கள் நீக்கம் செய்யப்படும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த காலங்களில் இத்தகைய நடவடிக்கைகள் எதுவும் தேர்தலுக்கு அண்மையாக மேறகொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(க-86

## 8 வருட சேவை புரிந்த ஆசிரியர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் 8 வருட சேவையை நிறைவு செய்த ஆசிரியர்களின் விவரங்களை கல்வி வலய திட்டமிடற் பிரிவில் உடனடியாக ஒப்படைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி அன்று 8 வருட சேவையை நிறைவு செய்த ஆசிரியர்களின் விவரங்களே திரட்டப்படுகின்றன.

(க-10-ரி)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஒக். 26

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் எதிர் யாழ். புனித யோசவ் வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

யாழ். மத்திய கல்லூரி எதிர் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

(க-86)

★ ★ ★

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

16 வயது, 18 வயது, 20 வயதுப் பிரிவினர்களிடையே இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. (க-86)

★ ★ ★

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும்இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது.

16 வயது, 18 வயது, 20 வயதுப் பிரிவினர்களிடையே போட்டிகள் நடைபெறும்.

(க-86)

# மரண அறிவித்தல்கள்

## தம்பித்துரை ஜீவராஜ்

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த தமிழ் மாணவர் பேரவை ஆரம்பகால உறுப்பினர் தம்பித்துரை ஜீவராஜ் 24-10-2001 அன்று கொழும்பில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**எஸ். சோமநாதன்**
(மைத்துனர்)

நெல்லியடி,
கரவெட்டி.

(சி/18854)

## கந்தையா கார்த்திகேசு

(இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர், சாவகச்சேரி)

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தையா கார்த்திகேசு அவர்கள் 25 - 10 - 2001 நேற்று வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கந்தையா-நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் அன்னப்பிள்ளை அவர்களின் அன்புக்கணவரும் ஸ்ரீமோகன் (சிறைச்சாலை உத்தியோகத்தர்), லம்போதரன், குகேந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-10-2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு துன்னாலை கிழக்கு, குருக்கட்டு வீதி, கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் துன்னாலை வடக்கு கிரான் காட்டு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஸ்ரீமோகன்**
(மகன்)

துன்னாலை,
கரவெட்டி.

(93860)

## திருமதி விசாலாட்சி பசுபதி

சாவகச்சேரி வடக்கு, மருதடி மேற்கு வீதியைச் சேர்ந்த திருமதி விசாலாட்சி பசுபதி அவர்கள் நேற்று [25-10-2001] வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்து — சின்னத்தங்கம் அவர்களின் அருமை மகளும், சாவகச்சேரி வடக்கு நா. பசுபதி அவர்களின் அன்பு மனைவியும், சி. புஸ்பராணி, லோ. விஜயராணி, ப. செல்வராணி [ஆசிரியை கிளி / வேப்பொடுகேணி சி. சி. த. க. பா. —யா/ வல்வை சிவகுரு வி. தற்காலிகம்] ப. வசந்தராணி [லண்டன்], ப. ஸ்ரீகாந்தன், ப. காந்தரூபன் [சேவையர், லண்டன்] ஆகியோரின் பாசமிகு தாயாரும், செ. சின்னத்துரை [கல்வி அதிகாரி கிளிநொச்சி], பொ. லோகநாதன் [கனகாம்பிகைக்குளம்], க. பரமேஸ்வரன், க. கந்தசாமி [லண்டன்], திருமதி சி. விமலா [ஆசிரியர் யா / ஸ்ரீபாரதி வித்தியாலயம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற றெஜினா, எழில்வேள், கிஸ்ணவேள், டினோசியா, சதீஸ், கலைவேந்தன், தமிழினி, அருள்ராஜ் றஜீவன், கஜீவன் [லண்டன்] ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், வல்லிபுரம், செல்லத்துரை, கனகலிங்கம், யோகம்மா, சிவகுரு [உப அதிபர் மீசாலை வீரசிங்கம் ம. வி] ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று [25 - 10 - 2001] வியாழக்கிழமை வித்தனை வீதி, வல்வெட்டித்துறையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ப. ஸ்ரீகாந்தன்** [மகன்]
**க. பரமேஸ்வரன்** [மருமகன்]

வசந்த பவனம்,
மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

தற்காலிக விலாசம்:
வித்தனை வீதி,
வல்வெட்டித்துறை.

[93858]

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2001 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த**

## யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

மாணவர்களான

| | | | |
|---|---|---|---|
| 1) | பிரபூர்ணா சிவஞானசுந்தரம் | — | 152 புள்ளிகள் |
| 2) | நிருபா பாலசுப்பிரமணியம் | — | 146 புள்ளிகள் |
| 3) | பொன்னுத்துரை காண்ஸ் | — | 139 புள்ளிகள் |
| 4) | தேவராஜா நவீனன் | — | 120 புள்ளிகள் |

ஆகியோரைப் பாராட்டுவதுடன் தொடர்ந்தும் அவர்கள் தம் கல்வியில் உயர்ந்து சிறப்புற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(சி/18855)

# பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் [illegible] உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓர் அடியான்

யாழ்ப்பாணம்.

(93859)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

**ஸ்ரீமோகனின் தந்தையார்**

## கந்தையா கார்த்திகேசு

அவர்கள் 25 - 10 - 2001 வியாழக்கிழமை சிவபதமெய்திவதைபிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்,
யாழ்ப்பாணம்.

(93863)

## விண்ணப்பம் கோரல்

### தனியார் பாதுகாப்புச் சேவை
### பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

01.01.2002 தொடக்கம் 31.12.2002 வரையான காலப்பகுதிக்குத் தனியார் பாதுகாப்புச்சேவை வழங்குவதற்குப் பின்வரும் தகுதியுடையோரிடமிருந்து என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் மீளளிக்கப்படாத ரூபா 250/-ஐ வைத்தியசாலையில் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 15.11.2001 காலை 10.00 மணி ஆகும்.

*1) அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் பெறப்பட்ட பதிவுச் சான்றிதழ்.*

*2) சேவை முன் அனுபவம்.*

*3) நிதி நிலைத் தகைமை (6 மாதகால வங்கிப்பற்றும், வருமான வரிப் பற்றுச்சீட்டும்)*

*4) மேலதிக விவரங்களை வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.*

பணிப்பாளர்,
வைத்திய கலாநிதி (செல்வி) என். கனகரத்தினம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C-18846)


## பட்டப்பின் படிப்பு பரீட்சைக்கான விண்ணப்பம்

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா முதல் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஆசிரிய மாணவர்களை விணணபத்தில் கையொப்பமிடுவதற்காக நாளை சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ். இந்து மகளிா கல்லூரி நிலைய சிரேஷ்ட போதனாசிரியரும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபருமான குமாரசாமி சண்முகநாதன் கேட்டுள்ளார்.

கற்கைநெறிக் கட்டணத்தை பூரணமாகச் செலுத்தியவர்களே பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(க-7)


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தவனம் யோகம்மா

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தவனம் யோகம்மா நேற்று (25.10.2001) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் (துறைமுக உத்தியோகத்தர் கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் செல்வராணி, செல்வராஜா, பத்மாவதி, கமலாவதி, மகேஸ்வரி, இராஜேஸ்வரி, மகேந்திரராஜா (டென்மார்க்), ரவீந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.10.2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் 2.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்
இ.தம்பித்துரை
(மருமகன்)

*வீரபத்திரர் கோயிலடி,*
*மல்லாகம்.*

(93862)


# கோண்டாவில் தில்லையம்பதி
# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
## சுற்றுப்புற மண்டபம் அமைத்தலுக்கான
## திருப்பணிக்கு
# நிதி உதவி வழங்கியோர் விவரம்

2000ஆம் ஆண்டு

| இல. | பற்.இல. | பெயர் | | இல. | பற்.இல. | பெயர் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 66. | 366 | கதிரவேலு சின்னையா (இனுவில்) | 5,000.00 |
| 01. | 301 | தர்மகுலசிங்கம் வரன் (டோகா) | 2,011.00 | 67. | 367 | சிவனேஸ்வரி சந்திரசேகர் (ஜேர்மனி) | 20,000.00 |
| 02. | 302 | தர்மலிங்கம் இராஜேஸ்வரி (லண்டன்) | 10,000.00 | 68. | 368 | சரவணை இராசையா (கோண்டாவில்) | 3,000.00 |
| 03. | 303 | நடராசா சுகிர்த்தன் (ஜேர்மனி) | 2,000.00 | 69. | 369 | தங்கம்மா ஐயாத்துரை (கோண்டாவில்) | 10,000.00 |
| 04. | 304 | செல்லப்பா சற்குணம் (கோண்டாவில்) | 3,000.00 | 70. | 370 | சின்னத்துரை அருமைத்துரை (கோண்டாவில்) | 500.00 |
| 05 | 305 | ராஜன் சந்திரசேகரன் (ஜேர்மனி) | 10,000.00 | 71. | 371 | குணம் தர்மானந்தம் (லண்டன்) | 14,000.00 |
| 06. | 306 | திருப்பதி மாணிக்கம் (கோண்டாவில்) | 2,000.00 | 72. | 372 | கந்தையா கருணாநிதி (பிரான்ஸ்) | 3,000.00 |
| 07. | 307 | சரோஜாதேவி கந்தையா (கோண்டாவில்) | 500.00 | 73. | 373 | நடராஜா சுவிந்தராஜ் (கோண்டாவில்) | 26,544.00 |
| 08. | 308 | ஏ.வி.மணிவாசகர் (கோண்டாவில் மேற்கு) | 1,000.00 | 74. | 374 | யோகராஜா பிரணவன் (கோண்டாவில்) | 1,000.00 |
| 09. | 309 | தவனேஸ்வரன் சங்கர் (லண்டன்) | 10,000.00 | 75. | 375 | பாலசிங்கம் தவஞானம் (லண்டன்) | 50,000.00 |
| 10. | 310 | கிருஷ்ணன் அருந்தவராஜா (ஜேர்மனி) | 5,000.00 | 76. | 376 | மார்க்கண்டு மகேந்திரராசா (கோண்டாவில்) | 1,500.00 |
| 11. | 311 | முத்தன் அன்னபூரணம் (கோண்டாவில்) | 1,000.00 | 77. | 377 | குணசிங்கம் சந்திரதாசன் (கோண்டாவில்) | 1,000.00 |
| 12. | 312 | தம்பிராஜா ஸ்ரீஜெயகரன் (உரும்பிராய்) | 2,000.00 | 78. | 378 | ஜனிதா தர்மராஜா (கோண்டாவில்) | 500.00 |
| 13. | 313 | செல்லத்துரை ருக்மணி (கோண்டாவில்) | 1,000.00 | 79. | 379 | சின்னப்பு குணரட்ணம் (கோண்டாவில்) | 500.00 |
| 14. | 314 | செல்லத்துரை அன்னம்மா (உரும்பிராய்) | 1,000.00 | 80. | 380 | குருநாதன் சோதிநாதன் (கோண்டாவில்) | 1,000.00 |
| 15. | 315 | குழந்தை தினகரன் (ஜேர்மனி) | 2,000.00 | 81. | 381 | கே.கலியுகவரதன் (திருநெல்வேலி) | 1,000.00 |
| 2001ஆம் ஆண்டு | | | | 82. | 382 | மகாலிங்கம் ஆனந்தஜெயம் (கோண்டாவில்) | 2,000.00 |
| 16. | 316 | சுப்பையா முத்துலிங்கம் (கோண்டாவில்) | 1,001.00 | 83. | 383 | கந்தசாமி வினோதன் (லண்டன்) | 2,000.00 |
| 17. | 317 | இராசன் இராஜேந்திரம் (கோண்டாவில்) | 2,000.00 | 84. | 384 | சின்னத்தம்பி நவரட்ணம் (கோண்டாவில்) | 500.00 |
| 18. | 318 | ஸ்ரீமோகன் அபிராமி (கோண்டாவில்) | 1,500.00 | 85. | 385 | ஐயன் வரதராஜன் (கோண்டாவில்) | 1,000.00 |
| 19. | 319 | சாயி அச்சகம் (கொக்குவில்) | 500.00 | 86. | 386 | ஜெயவர்த்தனா அம்பிகாநிதி (நோர்வே) | 5,000.00 |
| 20. | 320 | செல்வராஜா மதனகுமார் (கோண்டாவில்) | 65.00 | 87. | 387 | நவரட்ணம் லக்ஸ்மன் (கோண்டாவில்) | 500.00 |
| 21. | 321 | செல்வம் செல்லர் (கோண்டாவில்) | 50.00 | 88. | 388 | சிவசம்பு சசிகுமார் (கோண்டாவில்) | 500.00 |
| 22. | 322 | கதிரேசு கிருபாகரன் (கோண்டாவில்) | 200.00 | 89. | 389 | தெய்வநாயகம் கேசவன் (ஜேர்மனி) | 7,000.00 |
| 23. | 323 | ஜெகதீஸ்வரன் சாமுண்டீஸ்வரி (கோண்டாவில்) | 100.00 | 90. | 390 | மார்க்கண்டு கணேசரட்ணம் (உரும்பிராய்) | 1,000.00 |
| 24. | 324 | பொன்னன் பரசுராமன் (கோண்டாவில்) | 1,000.00 | 91. | 391 | சபாபதி சங்கரப்பிள்ளை (கோண்டாவில்) | 25,000.00 |
| 25. | 325 | சின்னராஜா புவனேந்திரம் (கோண்டாவில் மேற்கு) | 1,000.00 | 92. | 392 | கதிரவேலு மகேந்திரம் (லண்டன்) | 5,000.00 |
| 26. | 326 | தேவராஜா பிரதீபன் (கோண்டாவில்) | 500.00 | 93. | 393 | கிருஷ்ணன் கிருபாகரன் (லண்டன்) | 5,000.00 |
| 27. | 327 | மாணிக்கம் சிவசுப்பிரமணியம் (கோண்டாவில்) | 500.00 | 94. | 394 | பொன்னன் புலவர் (கோண்டாவில்) | 2,000.00 |
| 28. | 328 | சரஸ்வதி மயில்வாகனம் (கோண்டாவில்) | 550.00 | 95. | 395 | சின்னப்பு சிவராசா (லண்டன்) | 10,000.00 |
| 29. | 329 | திசவீரசிங்கம் சிவனேஸ்வரன் (சுவிஸ்) | 10,000.00 | 96. | 396 | அபிராமி யோகேஸ்வரன் (கோண்டாவில்) | 1,001.00 |
| 30. | 330 | குணம் சிறிகாந்தன் (சுவிஸ்) | 1,000.00 | 97. | 397 | வை.சின்னத்தம்பி (கோண்டாவில்) | 2,000.00 |
| 31. | 331 | பொன்னுத்துரை சுந்தரலிங்கம் | 1,600.00 | 98. | 398 | செல்லையா மகாலிங்கம் (கோண்டாவில்) | 1,000.00 |
| 32. | 332 | அரசலிங்கம் குகேந்திரன் (லண்டன்) | 5,000.00 | 99. | 399 | கிருஷ்ணபிள்ளை சதானந்தன் (கோண்டாவில்) | 10,000.00 |
| 33. | 333 | செல்லர் செல்வரட்ணம் (கோண்டாவில்) | 500.00 | 100. | 400 | சண்முகம் விஜயராசா (லண்டன்) | 5,000.00 |
| 34. | 334 | சோமசுந்தரம் சுந்தரேஸ்வரன் (கோண்டாவில்) | 1,000.00 | 101. | 401 | மகேந்திரன் கௌசிகன் (கோண்டாவில்) | 5,000.00 |
| 35. | 335 | செல்லத்துரை பரமலிங்கம் (கோண்டாவில்) | 1,000.00 | 102. | 402 | தருமு சேந்தன் (லண்டன்) | 10,000.00 |
| 36. | 336 | வைரமுத்து கந்தசாமி (லண்டன்) | 13,500.00 | 103. | 403 | திசவீரசிங்கம் தேவராசா (கோண்டாவில்) | 2,500.00 |
| 37. | 337 | அரியரட்ணம் சிவதாகரன் (லண்டன்) | 2,000.00 | 104. | 404 | குமாரபதி அஜித் (கோண்டாவில்) | 4,000.00 |
| 38. | 338 | சுந்தரலிங்கம் பிரபாகரன் (லண்டன்) | 20,000.00 | 105. | 405 | குமாரபதி தட்சாயினி (கோண்டாவில்) | 4,000.00 |
| 39. | 339 | பொன்னுத்துரை ஸ்ரீஸ்காந்தராஜா (கோண்டாவில்) | 750.00 | 106. | 406 | கந்தன் தம்பிராசா (கோண்டாவில்) | 1,000.00 |
| 40. | 340 | முத்துலிங்கம் ஜெயகாந்தன் (கோண்டாவில்) | 250.00 | 107. | 407 | தம்பிப்பிள்ளை பரராஜசிங்கம் (சுவிஸ்) | |
| 41. | 341 | செல்லத்துரை சுபாஸ்சந்திரபோஸ் (லண்டன்) | 14,000.00 | | | தம்பிப்பிள்ளை தவராஜாசிங்கம் (ஜேர்மனி) | 60,000.00 |
| 42. | 342 | இராமன் நாதன் (கோண்டாவில்) | 550.00 | 108. | 408 | சுப்பையா சிவலிங்கம் (கொலண்ட்) | 5,000.00 |
| 43. | 343 | பூமாதேவி சிவானந்தம் (திருநெல்வேலி) | 10,000.00 | 109. | 409 | சுப்பையா தர்மகுலசிங்கம் (கனடா) | 5,100.00 |
| 44. | 344 | சத்தியா பாலகிருஸ்ணன் (திருநெல்வேலி) | 2,000.00 | 110. | 410 | கந்தையா குணானந்தன் (லண்டன்) | 25,000.00 |
| 45. | 345 | வைரவன் முருகேசு (கோண்டாவில்) | 5,000.00 | 111. | 411 | தம்பிஐயா சுகுணசிங்கம் (லண்டன்) | 25,000.00 |
| 46. | 346 | செல்லத்துரை சுதன் (கோண்டாவில்) | 1,000.00 | 112. | 412 | சிவலிங்கம் வாசன் (சுவிஸ்) | 25,000.00 |
| 47. | 347 | செல்வம் செல்லர் (கோண்டாவில்) | 1,000.00 | 113. | 413 | சிவலிங்கம் உதயகுமார் (லண்டன்) | 25,000.00 |
| 48. | 348 | பொன்னுத்துரை குணசிங்கம் (கோண்டாவில்) | 4,350.00 | 114. | 414 | கனகலிங்கம் யோகேஸ்வரன் (சுவிஸ்) | 15,000.00 |
| 49. | 349 | இராசையா தவனேஸ்வரன் (கோண்டாவில்) | 1,000.00 | 115. | 415 | தர்மலிங்கம் குகதாசன் (லண்டன்) | 5,000.00 |
| 50. | 350 | செல்லர் சந்திரசேகரம் (உரும்பிராய்) | 1,000.00 | 116. | 416 | சந்திரன் சதீஸ்வரன் (லண்டன்) | 10,000.00 |
| 51. | 351. | மின்னல்கொடி கதிரவேலு (கோண்டாவில்) | 500.00 | 117. | 417 | நடராசா விஜயகுமார் (லண்டன்) | 10,000.00 |
| 52. | 352 | நாகர் வடிவேலு (கோண்டாவில்) | 1,000.00 | 118. | 418 | சரஸ்வதி குழந்தை (கோண்டாவில்) | 4,000.00 |
| 53. | 353 | சுப்பையா முத்துலிங்கம் (கோண்டாவில்) | 10,001.00 | 119. | 419 | சின்னத்துரை சோதி (கே.கே.எஸ்.) | 5,000.00 |
| 54. | 354 | மதியாபரணம் அரியரட்ணம் (கோண்டாவில்) | 10,001.00 | 120. | 420 | மார்க்கண்டு கணேசரட்ணம் (சுவிஸ்) | 500.00 |
| 55. | 355 | சாந்தி..கு (கோண்டாவில்) | 100.00 | 121. | 421 | கந்தன் துரைராஜா (கோண்டாவில்) | 1,000.00 |
| 56. | 356 | சிவபாலன் தயாகுலன் (கோண்டாவில்) | 2,000.00 | 122. | 422 | மதிராஜன் கஜீபன் (கோண்டாவில்) | 500.00 |
| 57. | 357 | மினாசி தர்மலிங்கம் (கோண்டாவில்) | 10,000.00 | 123. | 423 | கணேசன் சிவாஜி (கோண்டாவில்) | 500.00 |
| 58. | 358 | பொன்னன் உதயகுமார் (கோண்டாவில்) | 5,000.00 | 124. | 424 | நாகலிங்கம் குணசிங்கம் (கோண்டாவில்) | 5,000.00 |
| 59. | 359 | தங்கராஜா ஜெயானந்தராசா (கோண்டாவில்) | 1,000.00 | 125. | 425 | செல்வரட்ணம் செல்வச்சந்திரன் (இத்தாலி) | 10,000.00 |
| 60. | 360 | இராசதுரை யோகராஜா (கோண்டாவில்) | 20,000.00 | 126. | 426 | நகுலினி நவரட்ணம் (கோண்டாவில்) | 1,000.00 |
| 61. | 361 | செல்லர் கனகசபை (கோண்டாவில்) | 1,000.00 | 127. | 427 | வசந்தாதேவி சௌந்தரராஜன் (கோண்டாவில்) | 5,000.00 |
| 62. | 362 | கனகரத்தினம் புஸ்பராணி (கோண்டாவில்) | 500.00 | 128. | 428 | பாமினி சிவசுப்பிரமணியம் (இத்தாலி) | 25,000.00 |
| 63. | 363 | சிவனேஸ்வரி மயில்வாகனம் (கோண்டாவில்) | 5,000.00 | 129. | 429 | கந்தையா உதயகுமார் (ஜேர்மனி) | 88,000.00 |
| 64. | 364 | சந்திரசேகரம் தீபசேகரம் (கோண்டாவில்) | 1,000.00 | 130. | 430 | பொன்னம்பலம் குகன் (கனடா) | 1,63,500.00 |
| 65. | 365 | தவமணி அன்னலிங்கம் (கோண்டாவில்) | 10,000.00 | 131. | 431. | கதிரேசு சின்னத்தங்கச்சி (கோண்டாவில்) | 1,000.00 |
| | | | | | | மொத்தம் | 10,05,624.00 |

குறிப்பு:- (சபாபதி சங்கரப்பிள்ளை குடும்பத்தினரால் (கோண்டாவில்) 1998இல் மண்டபத்திற்கான தூண்களும், போதிகளும் ரூபா 1,10,195.00 செலவில் அமைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது)

*அடியார் பெருமக்களே!*

அன்னையின் திருக்கோயிலில் பல லட்ச ரூபா செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்கு உதவிகள் வழங்கிய அனைத்துப் பெருமக்களுக்கும் அன்னையின் திருவருள் கிடைக்கவேண்டி, மேலும் இப்பணிகளுக்கு உதவிகள் வழங்க இருக்கும் அன்பர்கள் திருப்பணிச் சபையினருடன் தொடர்புகொண்டு வழங்கலாம் என்பதை பணிவன்புடன் அறியத்தருகின்றோம்.

**தில்லையம்பதியாளே சரணம் சரணம் சரணம்!**

*தில்லையம்பதி, கோண்டாவில்.* (93856) இங்ஙனம், திருப்பணிச் சபையினர், திருக்கோயில்.

# யாழ்.அணி மீண்டும் வெற்றி!

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்கிடையிலான முக்கோணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாண அணி, மட்டக்களப்பு மாவட்ட அணியை மிக இலகுவாக 8 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் மாவட்ட ரீதியிலான தேசிய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிலையின் முதற்சுற்று ஆட்டத்திலேயே மட்டக்களப்பு அணியை யாழ்.அணி தோற்கடித்தது.

இந்த ஆட்டம் சில தினங்களுக்கு முன்னர் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான நிலையில் மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது.

புதிய அட்டவணைப்படி ஆட்டம் மீண்டும் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று புதிதாக நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 29.3 ஓவர்களில் 101 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. விஜிந்த - 18, ராஜ்பவன் - 26 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ்.விமலன் 9 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஆர்.ஷாஜகான் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், லவேந்திரா 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யாழ்.மாவட்ட அணி 2 விக்கெட் இழப்புக்கு 102 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

ஏ.ரி.கௌரிபாகன் ஆட்டமிழக்காமல் 48, எஸ்.சசிகரன் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஏற்கனவே முதற்சுற்று ஆட்டம் ஒன்றில் யாழ்.அணி வவுனியா மாவட்ட அணியைத் தோற்கடித்திருந்தது என்பது தெரிந்ததே. (உ)

## ராமேஸ்வரத்துக்கு 14 ஈழஅகதிகள்

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இராமேஸ்வரம் - கோதண்டராமர் கோயிலின் தென்பகுதிக் கடற்கரையை 14ஈழத் தமிழ் அகதிகள் சென்றடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## மருந்தாளர் பரீட்சை யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம்,ஒக்.26

மருந்தாளர் தரம் II 'வு' இற்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை நாளை மறுதினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை கொழும்பில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்.பரீட்சார்த்திகளின் நலன் கருதி மேலிடத்துடன் தொடர்பு கொண்டு இந்தப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தாங்கள் நடவடிக்கை எடுத்ததாக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார். (உ)


உரும்பிராய்
சென்மைக்கல் சனசமூக நிலைய ஆதரவில்
We Serve உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்
இலவச மருத்துவ முகாம்

இடம் :- றோ.க. வித்தியாலயம். உரும்பிராய்.
காலம் :- 28.10.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - 12.30 வரை

மேற்படி முகாமில்
✪ கண்பரிசோதனை ✪ நீரிழிவுப் பரிசோதனை
✪ பொதுவான நோய்கள் பரிசோதனை

கண் பரிசோதனை
லயன் எஸ்.எம். பெர்னாண்டோ MJF
வைத்திய நிபுணர்களும், மருத்துவ பீட மாணவர்களும்
இந்தப் பரிசோதனைகளை நடத்துவர்
அனைவரும் வருக! பயன் பெறுக!

லயன் V.சின்னத்துரை J.P. தலைவர்
லயன் த.திருநாவுக்கரசு செயலாளர்
(C/18853)



மயிலணி மாரியம்மன் துணை நிற்க
விஜயதசமி நன்நாளில் சகலகலாவல்லி அருள்பெற
வாழ்த்துகின்றோம்

கல்விப்பட்டப்பின் படிப்பில் விசேட சித்தியெய்தி 06.10.2001 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற
பிரம்மஸ்ரீ. குகதாசசர்மா சிவகுமார்
B.A.Dip. in Edu. (Merit pass)
யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி
அவர்கட்கும்
பிரம்மஸ்ரீ. பரமானந்தகுருக்கள் வாசுதேவசர்மா
B.A (Hons) (சமஸ்கிருதம்) (சாவகச்சேரி)
அவர்கட்கும்
எம் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

தி.கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் (ஆசிரியர்) குடும்பத்தினர்
சாவகச்சேரி
பிரதமகுரு, கல்வயல் ஐயனார் ஆலயம்.. (93865)



யாழ்.மத்திய கல்லூரி
இந்து மாணவர் மன்றத்தின்
வாணி விழாவும்
பரிசளிப்பு வைபவமும்




இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(பிரார்த்தனை மண்டபம்)
காலம்: இன்று (26.10.2001) வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணி
தலைவர்: உ.தினேஷ்குமார்.
பிரதம விருந்தினர்:
அருட்கவி
சீ.விநாசித்தம்பிப் புலவர்
(முதுகலைமாணி)

தலைமை உரை : உ.தினேஷ்குமார்.
வரவேற்புரை : க.நவதர்சன் (உப தலைவர்)
ஆரம்ப உரை : திரு.க.இராசதுரை
(அதிபர்), (இந்து மாமன்றப் போசகர்)
அறிமுக உரை : திரு.ஞான.திருக்கேதீஸ்வரன்
(இந்து மாமன்றப் பொறுப்பாசிரியர்)
பிரதம விருந்தினரைக் கௌரவித்தல்:
பரிசளிப்பு வைபவம்:
இராம கிருஷ்ணமிஷன் முத்திரை வெளியீடல்:
சுவாமி சித்ரூபானந்தா
நன்றியுரை : வே.சதீஸ்
(செயலாளர், யா/மத்திய கல்லூரி இந்து மாமன்றம்)

விளம்பர அன்பளிப்பு:
1. நடராசா நிருபகுமார் (வேலணை)
2. சண்.வாமதேவன் (உப அதிபர் - கோண்டாவில் இராமகிருஸ்ண மகா.வித்தியாலயம்)
3. இரா. செல்வவடிவேல் (ஆசிரியர்)
4. செ.திருச்சிற்றம்பலம்
- விநாயகர் ஸ்ரோர்ஸ், பேட்டை, கோண்டாவில். (93845)



பாராட்டுகின்றோம்
திரு இருதயக் கல்லூரியின் அதிபர்



T.F.மனோகரன்
(TT' B.A Dip. in Edu. S.L.P.S. I)
நேர்மை, திறமை, அன்புமிக்க எமது கல்லூரி அதிபர்
தைரியநாதன் பெர்னான்டோ மனோகரன் அவர்கள்
அதிபர் தரம் 1க்கு 01.06.1994இலிருந்து பதவியுயர்வு பெற்றமையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பிரதி அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்
யா/வதிரி திரு இருதயக் கல்லூரி கரவெட்டி.
(93850)



'தருண அருண'வின்
திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறிக்கான
விண்ணப்பம் கோரல்


'தருண அருண' (கொழும்பு) நிறுவனத்தால் பட்டதாரிகளைத் தொழில்சார் பயிற்சி நெறிகளுக்காகத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(C/18845)



சிவத் தமிழ் முனிவர் வாழி!



தாய் போல் தமிழோம்பித் தொல்சமயப் பேரவையை
வாழ்வாங்கு வாழ வழிவகுத்த் ஞாலகில்
என்றும் புகழ் சுரக்கும்
அளவையூர் அருட்கவியார்
நின்றுலகில் வாழ்க நெடிது.
சீராரும் திருமகளும் மலைமகளும் சேர்ந்து வாழ்த்த
பேராரும் பிரணவத்தின் பேருண்மை விளங்கு சீலர்
பாராரும் சிவமாம் தன்மையது பாரினில் நிலைத்திட
தாராருநா சுநாராயண புதுக்கோவில் எடுத்தோய் வாழி!

அருட்கவி சீ. விநாசித்தம்பி
அவர்களுக்கு கௌரவ முதுமாணிப் பட்டத்தை யாழ். பல்கலைக்கழகம் வழங்கியதனையிட்டு அன்னாரை வாழ்த்துகின்றோம்.
உடுப்பிட்டிச் சந்தி,
அருள்மிகு ஸ்ரீவல்லைவாழ் சித்திவிநாயகர்,
ஆலய திருப்பணிச் சபையினரும் அடியார்களும்.
(93866)



ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
குணால், மோனல், கரன்
மற்றும் பலர் நடித்த
பார்வை ஒன்றே போதுமே
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி,ஞாயிறு : 10.30, 2.5 (புதிய நேரம்)
(C/18719)



நாகம்ஸ் சுன்னாகம்
M.G.R., ஜெயலலிதா,
நாகேஷ் நடித்த
ஆயிரத்தில் ஒருவன்
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (பி.நே.)
(93861)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
இந்துமா மன்றம் நடத்தும்
வாணி விழாவும் விஜயதசமியும் - 2001

இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய
காலம் : இன்று (26-10-2001) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி
தலைவர் : திரு.இ.விஜேந்திரன் (மன்றத் தலைவர்)
பிரதம விருந்தினர்: திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
ஆசியுரை : பேராசிரியர் விநாயகமூர்த்தி சிவசாமி அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)
வாழ்த்துரை: திரு.பா.தனபாலன் அவர்கள்
(உபபீடாதிபதி - கல்வியும் நலமேம்பாடும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி)
பரிசில்கள் வழங்கல்: கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், மாலை கட்டுதல் போட்டிகளுக்கான பரிசில் வழங்கப்படும்
நிகழ்ச்சிகள் :★ குழு இசை ★ கவிதை ★ பாட்டு ★ நடனம் ★ நாடகம் ★ வில்லிசை
★ பேச்சு - திரு.ப.இராஜேஸ்வரன்
(சமகால கல்வி உள்ளீட்டில் சாயி விழுமியக் கல்வி)
★ பட்டிமன்றம் - தலைப்பு
"சமய விழுமியங்கள் கால வெள்ளத்தில் அள்ளுண்டு போகின்றன, போகவில்லை"
நடுவர் : திரு.க.சிவராமலிங்கம அவர்கள்
நன்றியுரை: செல்வி க.நிவேதிதா (மன்றச் செயலாளர்)
கல்லூரிக் கீதம்
(93840)

விளம்பர அன்பளிப்பு:-
பேபி போட்டோ, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
அன்னம்ஸ், இல.114, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



மஹா கும்பாபிஷேகமும், அடிக்கல் நடும் வைபவமும்
வட்டு - வடக்கு, பிரமனாச்சி தோட்டம் கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்
நூதன பஞ்ச முக விநாயகர் பஞ்ச குண்ட பஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் (29.10.2001) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.
சிறப்புச் சொற்பொழிவு: செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்கள்
வலி மேற்கு பிரதேச சபைத் தலைவரும், வலி மேற்கு இந்து ஆலய மகாசபையின் போசகருமாகிய திரு.ந.திரிலோகநாதன அவர்கள் ஆலய உள் வீதி மண்டபத்துக்கான அடிக்கல்லை நட்டுவைத்து விழாவைச் சிறப்பிப்பார்கள்.
அடியார்கள் வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தேவஸ்தானம்.
(93855)

கணக்கீடு
திரு.பாலவாசன் B.B.A (F.M.Sol.)
A/L. 2003
சொத்துவிற்பனை
SAT., SUN. →9 - 10 a.m.
ஆரம்பம்:27.10.2001→10 a.m.
விக்னா கல்வி நிறுவனம்

எமது FIVE STAR வீடியோ CD வெளியீடு
✪ பாண்டவர் பூமி
✪ கபடி கபடி
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்



மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன்
சிறுவர் இல்லம் பவளவிழா
புதிய அஞ்சல் முத்திரை வெளியீடு

காலம் :- இன்று (26.10.2001) வெள்ளிக்கிழமை.
நேரம் :- காலை 9.30 மணி.
இடம் :- வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
தலைவர் :- Rtn திரு.N.வன்னியசிங்கம்
பிரதம விருந்தினர்: திரு.ஏ.கே.சிவஞானசுந்தரம்
பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (யாழ்ப்பாணம்)
அவர்கள்
புதிய அஞ்சல் முத்திரையை வெளியிட்டு வைப்பார்.
சிறப்பு விருந்தினர்: திரு.எஸ்.சுந்தரமூர்த்தி
(பிரதேச அஞ்சல் அத்தியட்சகர், (யாழ்ப்பாணம்)

புதிய அஞ்சல் முத்திரை வெளியீடு:
வடமராட்சியில் இடங்கள்:
(1) உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. (2) வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
(3) தேவரயாளி இந்துக் கல்லூரி. (4) வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
(5) மக்கள் வங்கி பருத்தித்துறை.
முகாமையாளர் திரு.பொ.கணேசலிங்கம் அவர்களும் கல்லூரிகளின் அதிபர்களும் முத்திரையை வெளியிட்டு வைப்பார்கள்.
- செயலாளர்.
ஸ்ரீராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. (C/18851)


# பாடசாலை அதிபர்கள் இருவர் பட்டிருப்பில் வைத்துக் கைது!

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் அதிபர்களாகப் பணியாற்றும் இருவர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் கைதாகினர்.

உளுகாமம் சுண்டுமளி வித்தியாலய பிரதி அதிபர் அன்னப்பன் இராசதுரை (வயது 41), கல்முந்தல் வெளி றோ.க. வித்தியாலய அதிபர் வீரக்குட்டி கோபாலப்பிள்ளை ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

பாடசாலைப் பணி முடிந்து வீடு திரும்பிய சமயம் பட்டிருப்புச் சந்தியில் வைத்து நாசகாரத் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் இவர்கள் இருவரையும் கைது செய்ததாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

## திருகோணமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளனர்.

ரெலோ அமைப்பினர் தமது பிரதிநிதி யார் என்பது பற்றி இன்னமும் அறியத்தராத காரணத்தால் வேட்புமனு இறுதிசெய்ய முடியாதுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பின் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே -

திருகோணமலை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட புதிய ஜன நாயகக் கட்சி, ஜே.வி.பி. என்பன நேற்று வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன. இதுவரை மூன்று சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன இன்றும், ஐக்கிய தேசியக் கட்சி நாளையும் வேட்புமனுத் தாக்கல் செயயும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-145)

## முதல் வேட்புமனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வவுனியா செயலகத்தில் தாக்கல் செய்தது.

ரத்னாயக்கா செட்டிக்கே உபாலி சமரசிங்க என்பவர் முதன்மை வேட்பாளராகவும், பெண் ஒருவர் உட்பட இரண்டு தமிழர்கள், மூன்று முஸ்லிம்கள், 5 சிங்களவர்கள் அடங்கிய வேட்பாளர் பட்டியலை ஜே.வி.பி. தாக்கல் செய்தது. (உ-ஒ-6)


நியூ ரிதம்ஸ்
நுண்கலை நிறுவனம்.
சுபநேர புதிய வகுப்புக்கள்
❖ ஓகன்
❖ கிற்றார்
❖ ஹார்மோனியம்
❖ மெலோடிக்கா
காலம்:- சனிக்கிழமை
(27.10.2001)
நேரம்:- p.m. 3.30 - 5.30 [N.T]
R.கீதன்
No.691, ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் (93840)



MATHS CENTRE
NELLIYADY
A/L
DAY CLASS (2002)
கலை, வர்த்தகப் பிரிவுகள்
எமது வழமையான ஆசிரியர் அணியின் வழிகாட்டலில்......
துரித மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்:-
நாளை (27.10.2001) சனி 6.30
அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்.
MATHS CENTRE
M.M.V. Road,
Nelliyady.
(93851) - நிர்வாகி.


# அறிவித்தல்

## வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

## பனை அபிவிருத்திச் சபை

## சீவல் தொழிலாளர்களுக்கான ஆயுள் காப்புறுதித் திட்டம்

- ▲ ஒரு தொழிலாளிக்கான மொத்தக் காப்புறுதித் தொகை 100,000/= (ஒரு இலட்சம் ரூபா)
- ▲ இத்திட்டத்துக்கான முழுக்கொடுப்பனவும் தொழிலாளர்கள் சார்பில் பனை அபிவிருத்திச்சபையே செலுத்தும்.
- ▲ எதிர்காலத்திலும் இக்காப்புறுதித் திட்டம் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு அமுலில் இருக்க எல்லா ஏற்பாடுகளும் பனை அபிவிருத்திச்சபையே பொறுப்பேற்கும்.
- ▲ இக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளி தொழிலில் ஈடுபட்டிருக்கும் வேளையில் மட்டுமல்லாது சாதாரண நேரத்தில்கூட விபத்தையோ அன்றி உயிரிழப்பையோ எக்காரணம் கொண்டும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் சூழலில் அவருக்கு அல்லது அவர் சார்ந்த குடும்பத்திற்கு மேற்படி 100,000 ரூபா இழப்பீடு வழங்க இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உத்தரவாதப் படுத்தி காப்புறுதிப் பத்திரம் வழங்கும்.
- ▲ இக்காப்புறுதித் திட்டத்துக்கென தொழிலாளர்களிடம் இருந்து எதுவித பணமும் அறவிடப்படமாட்டாது.

யாழ்-குடாநாட்டில் சீவல் தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள் எதிர்நோக்கக்கூடிய விபத்துக்களையும் உயிரிழப்புக்களையும் ஈடுசெய்யும் வகையில் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் ஆயுள் காப்புறுதித் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பொருட்டு இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பின்வரும் விவரங்களை தாம் அங்கத்துவம் வகிக்கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 10.11.2001ஆம் திகதிக்கு முன்னர் பனை அபிவிருத்திச்சபை பொதுமுகாமையாளரிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*1. முழுப்பெயர் 2. விலாசம் 3. பிறந்த திகதி*
*4. அடையாள அட்டை இலக்கம் 5. அங்கத்துவம் வகிக்கும் சங்கத்தின் பெயர்*
*6. அங்கத்துவ இலக்கம்*

**நா.சந்திரமோகன்**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**பனை அபிவிருத்திச் சபை.**

*குறிப்பு:-* இது தொடர்பாக மேலதிக விவரங்களை அறிந்துகொள்ள விரும்பும் தொழிலாளர்களோ அவர்கள் சார்ந்த சங்கங்களோ கண்டி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபை தலைமையகத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்.
(தொலைபேசி இல:- யாழ். 2034, கொழும்புக் காரியாலயம் - 589185, 586820)
இத்திட்டத்திற்கென எவருக்கும் பணம் செலுத்த வேண்டாம் என அனைத்துத் தொழிலாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (C-18850)

## விளம்பரதாரருக்கு ஒரு நற்செய்தி!

**உதயனில் வெளியாகும் விளம்பரங்களை இனிமேல் நாடு முழுவதும் எட்டக்கூடியதாக 'சுடர் ஒளி' நாளிதழ் மூலமும் பிரசுரிக்கலாம்.**

உதயனில் இடம்பெறும் மரண அறிவித்தல் மற்றும் முக்கிய விளம்பரங்களை இனிமேல் கொழும்பில் வெளியாகும் 'சுடர் ஒளி' நாளிதழிலும் சமகாலத்தில் பிரசுரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உதயனில் விளம்பரத்தைப் பிரசுரிக்கும்போது மேலதிகமாகச் சிறு தொகையைச் செலுத்துவதன் மூலம் உங்கள் விளம்பரம் 'சுடர் ஒளி' மூலம் நாடு முழுவதும் வாசகர்களை எட்டுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களை 'உதயன்' அலுவலகத்தின் விளம்பரப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**- நிர்வாகத்தினர்.**

**இன்னும் மூன்று தினங்களில் 29.10.2001 திங்கட்கிழமை முதல் 'சுடர் ஒளி' நாளிதழாக மலர்கின்றது!** (C/18857)

## 19ஆம் வருட நினைவலைகள்

மலர்வு 26 - 06 - 1940



உதிர்வு 26 - 10 - 1982

**அமரர் சின்னத்தம்பி கந்தையா**
(பொலீஸ் சார்ஜன்ட்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறையும்
தெய்வத்துள் ஒன்றான அப்பாவே!
வையத்துள் நாம் வாழும் வரை - நீங்கள்
தெய்வமாய் வழிகாட்டி நிற்பீர்கள்!

"திருவேரகம்" உசன்,மிருசுவில். (93768)
என்றும் உங்கள் நினைவுகளுடன், மனைவி, பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.